# நிமிர்வு

facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை – 6 | ஆடி, 2017 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00





## எம்மண்ணின் வளங்களுக்கு கூட்டு வேலைத்திட்டம்

## தமிழ்த் தேசியத்தை அழித்தொழிக்கும் பயணம்

## ஈழத்தின் வேளாண் மன்னர்

# சிங்கள அரசின் சதி

ஆராயும் அறிவே நிமிர்வு

# சமூகத்தின் வளர்ச்சியில் சனசமூக நிலையங்களின் வகிபாகம்

- விக்னேஸ்வரி -




சனசமூக நிலையங்கள் என்பது சமூக முன்னேற்றத்திற்கான ஒரு செயற்பாட்டு மையங்களாகும். ஒவ்வோர் ஊரிலும் சமூகத்தின் மையமாகவும் சமூகத்தில் உள்ள பல்வேறுபட்டவர்களையும் ஒருங்கிணைக்கும் நிலையமாக இவை வளர்ச்சியடைந்துள்ளமை சிறப்பான தாகும்.

ஒரு சனசமூக நிலையத்தை எடுத்துக் கொண்டால் நூலகம், பத்திரிகைப் பிரிவு, கலை, கலாச்சார செயற்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி, விளையாட்டு அபிவிருத்தி, ஆய்வரங்குகள், கருத்தரங்குகள் என்பவற்றை இலகுவாக செய்யக் கூடிய மையமாகவும் விளங்கி வருகின்றமை முக்கியமானதாகும். இதனூடாக கிராமம், நகரம், மாவட்டம் மட்டுமல்ல நாட்டின் வளர்ச்சியும் தங்கியுள்ளது. உலக நடப்புக்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள பத்திரிகைகள், நூல்கள் என்பன உதவுகின்றன. அவை அனைத்தும் கிடைக்கும் இடமாக சனசமூக நிலையங்கள் திகழ்கின்றன. வாசிப்பு ஆற்றலை விருத்தி செய்யவும் இவை உதவுகின்றன.

தகவல் தொழில்நுட்பத் துறையிலும் தொலைத் தொடர்புத்துறையிலும் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முன்னர், உலக வலைத்தொடர்பும், தகவற்தொலைபேசிகளும் கண்டுபிடிக்கப்பட முன்னர், 80 களிலும் 90 களிலும் சனசமூக நிலையங்கள் நமது கிராமங்களின் முக்கிய தாபனங்களாக இருந்தன. கிராம நகர மட்டத்திலும் பல சனசமூக நிலையங்கள் தோற்றம் பெற்றன. அவை பல செயற்திட்டங்களை செய்தன. பாமரன் முதல் கல்வியாளர்கள் வரை சனசமூக நிலையங்களில் அனைவரின் பங்களிப்பும் இருந்தன. ஊரின் அனைத்து நடவடிக்கைகளும் சனசமூக நிலையங்களினூடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தன. கோயில்களுக்கு அடுத்ததாக மக்கள் பெருமளவு கூடிய இடங்களாக இருந்தன. சனசமூக நிலைய நூலகங்களில் அன்றைய தினசரிகள் உடனுக்குடன் கிடைத்தன. மாதாந்த சஞ்சிகைகளும், வாராந்த வெளியீடுகளும் கூடக் கிடைத்தன. சிலர் காலையிலும் பலர் மாலையிலும் செய்திகளை வாசித்து தமது அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களைப் பற்றி தெளிவாக அறிந்திருந்தனர். அவற்றைப் பற்றிக் கூடிக்கதைக்கவும் சனசமூகநிலையங்களைப் பயன்படுத்தினர். தமிழரின் ஆயுதப் போராட்ட ஆரம்ப காலகட்டங்களில் இயக்கங்களின் பிரச்சார வேலைகளுக்கும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளிலும் சனசமூக நிலையங்கள் பெரும் பங்காற்றின.

இன்று சனசமூக நிலையங்களின் செயற்பாட்டுத் தன்மைகள் குறைந்தவண்ணம் உள்ளன. சனசமூக நிலையங்களுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு போகின்றது. முன்னைய காலங்களில் செய்திகளை அறிவதற்காக மக்கள் சனசமூக நிலையங்களை நாடிச்சென்றனர். இன்று தொழிநுட்ப வளர்ச்சியால் தாம் இருந்த இடத்தில் இருந்தே உடனுக்குடன் செய்திகளை இணையத்தில் பார்க்கின்றனர். சனசமூக நிலையங்களுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமே. இன்று அதிகம் வயதானவர்கள் தான் சனசமூக நிலையங்களுக்கு செல்வதனை காணக் கூடியதாக உள்ளது.

செயற்பாட்டுத் தளத்தில் பல தடைகளை எதிர் கொண்டாலும் எல்லாவற்றையும் மீறி சில சனசமூக நிலையங்கள் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றன. குறிப்பாக சனசமூகநிலையங்களின் கீழ் எத்தனையோ முன்பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றில் சில முன்பள்ளிகளில் மாணவர்களுக்கு இலவசமாக சீருடை, மதிய உணவு, பசுப்பால் என்பவையெல்லாம் வழங்கப்படுகின்றன. அவற்றுக்கு எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. இவற்றுக்கான

செலவினை சனசமூக நிலையங்களே வழங்குகின்றன என்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அத்தோடு இலவச மருத்துவ முகாம்கள், இரத்ததான நிகழ்வுகள், கல்விக் கௌரவிப்புக்கள் என பல விடயங்களை சில சனசமூக நிலையங்கள் இன்றும் நடத்தி கலை கலாசார அம்சங்களை விருத்தி செய்கின்றன. சில சனசமூக நிலையங்களில் தையல், கணனி, ஆங்கிலமொழி என்பன இலவசமாக கற்பிக்கப்படுகின்றன. சில சனசமூக நிலையங்கள் இவ்வாறான செயற்பாடுகளால் வளர்ச்சி அடைந்து வருகின்றன. ஆனால் சில சனசமூக நிலையங்கள் செயற்பட முடியாமல் குறிப்பாக ஊர்மக்களின் ஒத்துழைப்புக்கள் சரிவரக்கிடைக் காமையினால் மூடப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையம் ஒன்று ஒழுங்காக இயங்க வேண்டுமாயின் அந்த ஊர் மக்கள் அனைவரினதும் ஒத் துழைப்பும் கிடைக்க வேண்டும். தற்போதைய இளை ஞர்கள் சிலர் சனசமூக நிலையங்களை அரட்டை அடிக் கப் பயன்படுத்தும் நிலையும் உள்ளது. சனசமூக நிலையங் களையும் நூல்நிலையங்களையும் எமது சமூகம் சிறந்த முறையில் பயன்படுத்துமாக இருந்தால் நல்ல தொரு பலனை அறுவடை செய்யலாம். ஊரின் ஒவ் வொரு சனசமூக நிலையமும், நூல் நிலையமும் வாசகர் வட்டங்களை உருவாக்குவதன் ஊடாக இளைஞர்களுக் கிடையே ஆரோக்கியமான வாசிப்பு பழக்கத்தையும், விவாதத் திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

சில சனசமூக நிலையங்கள் சமூகத் தொண்டுகளை செய்து வருகின்றன. அதாவது பொது இடங்களை சுத்தம் செய்தல், மரங்களை நாட்டி இயற்கையை பாதுகாத்தல், ஆலயத்திருவிழாக்காலங்களில் வேண்டிய தொண்டுகளை செய்தல், அன்னதான நிகழ்வுகள், தண்ணீர் பந்தல் போடுதல் என சமயத் தொண்டுகளும் ஆற்றி வருகின்றன. ஒரு ஊரின் முன்னேற்றத்திற்கு அங்குள்ள சனசமூக நிலையமே பெரும் பங்காற்றுகின்றது. வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்கு சில சனசமூக நிலையங்கள் ஏதாவ தொரு வகையில் உதவி செய்து அவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு ஊக்கமளிக்கின்றன. சுயதொழில் ஊக்கு விப்பிற்கான சிறுதொகைப் பணத்தை கடனாக வழங்கி சில சனசமூகநிலையங்கள் தமது ஊரினை முன்னேற்று கின்றனர். எமது பிரதேசங்களில் சனசமூக நிலையங் களின் வளர்ச்சிக்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். பல சனசமூக நிலையங்களை நிர்வகிப்பதற்கு புலம்பெயர்மக்கள் தாங்கள் வசிக்கும் நாடுகளில் சங்கங்கள், அமைப்புக்களை வைத்திருக் கிறார்கள். பல ஊர்களில் சனசமூக நிலையங்கள் முன் மாதிரிகளாக விளங்குகின்றன. ஊர்களின் அடை யாளங்களாகவும் உள்ளன. சனசமூக நிலையங்களை வளர்ப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கல்வியலாளர்கள், முதியவர்கள் எல்லாம் இன் றைய சமூகத்தினரிடம் வாசிப்புத் தன்மை குறைவடைந்து

## “சனசமூக நிலையம் ஒன்று ஒழுங்காக இயங்க வேண்டுமாயின் அந்த ஊர் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும்”

விட்டதாக கவலையடைகின்றனர். இன்று தமிழ் மாண வர்கள் பெரும்பான்மையினரின் கல்வி நிலையினை எடுத் துப் பார்த்தால் மற்றைய இடங்களைவிட பின்தங்கியே உள்ளது. அவர்களிடம் தேடல் என்ற தன்மை இல்லாமல் போய்விட்டது. கல்வி என்பது பாடப்புத்தகத்துடன் நின்று விடுவதல்ல. தேடித் தேடி அறிவார்ந்த விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு நாம் நூல்கள் பத்திரிகைகளை வாசிக்க வேண்டும். இதற்கு சனசமூக நிலைய நூலகங்கள் நல்லதொரு வளமாகும்.

எனவே சனசமூக நிலையங்களுக்கு மீண்டும் இளை ஞர்களைக் கவர்ந்திழுக்க வேண்டிய தேவை உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக வீட்டுக்கு வீடு கணனிகள் வந்து விட்டன. தொலைக்காட்சிகளும் மலிந்து விட்டன. எல்லார் கைகளிலும் கைபேசிகளும் வந்து விட்டன. இதனால் பொழுது போக்குக்கும் செய்தித் தேடலுக்கும் சனசமூகநிலையங்களுக்குப் போக வேண்டிய தேவை இளைஞர் மத்தியில் குறைந்து கொண்டு போகிறது.

மேலைநாடுகளில் இதனைக் கண்டுணர்ந்த சன சமூக நிலையங்கள் தமது வழமையான சேவை களை விடுத்து வேறு சேவைகளை வழங்கத் தொடங்கி யுள்ளனர். அவர்கள் இளைஞர்களைக் கவருவதற்காக உள்ளக விளையாட்டு அரங்குகளை அமைத்துள்ளனர். அங்கு நீச்சல் தடாகம், பட்மின்டன் திடல் (பூப்பந்தாட்டம்) , கரம் விளையாட்டு மேசைகள், சதுரங்க மேசைகள் போன்றவற்றை நிறுவியுள்ளனர். இலவச கணனி பயன் பாட்டை வழங்குகின்றனர். வாரமொரு முறை இலவச திரைப்படங்களை காண்பிக்கின்றனர். ஆண் பெண் களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக் கும் விருந்துபசாரங்களையும் நடனங்களையும் நடத்து கின்றனர். கவிதை மேடைகள், கலந்துரையாடல்கள், அரங்காற்றுகைகள் என்பவற்றுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றனர். இவற்றினூடாக ஒரு ஆரோக்கிய மான, சமாதானமான, செயற்திறன் கூடிய ஒரு இளைய சமூகத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். இவற்றைப் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் எமது சனசமூகநிலையங்களையும் தற்போதைய தகவல் பரி மாற்ற யுகத்திற்கு பொருத்தமான மையங்களாக மாற்ற முடியும்.

லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.Nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

# ஆசிரியர் பார்வை

"நீதித்துறையின் கரங்களை சட்டமா அதிபர் கட்டி வைத்திருக்கிறார். இது ஜனநாயக நீதித்துறையின் அடிப்படைத் தத்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு முற்றிலும் முரணானது. எந்தவொரு பிணை மனுவையும் நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராக சட்டமா அதிபர் இருக்கிறார். இந்த நடைமுறை இன்னமும் சிறிலங்காவில் உள்ளது." என இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புக்கான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து இறுதியில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸவுடனான சந்திப்பில் இடைநடுவில் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் வெளியேறினார். ஐ.நாவுடன் ஒத்துழைக்கவில்லை என்று பகிரங்கமாக அறிவிப்பேன் என்று அவர் விஜேதாச ராஜபக்சவை எச்சரித்துள்ளமையும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

இலங்கை அரசாங்கம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாட்டில் எவ்வித முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தாமல் இருக்கிறது. முன்னேற்றமானது தாமதமடைந்துள்ளது. அது கள ரீதியாக நிறுத்தப்பட்டுவிட்டது. தற்போதைய நிலையை வைத்துப்பார்க்கும் போது அரசாங்கம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் நீதியை நிலைநாட்டும் என எதிர்பார்ப்பது கடினமாக உள்ளது.

இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட காலத்துக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டாவிடின் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெறலாம். ஐரோப்பிய ஒன்றியத்தின் சலுகைகளை இலங்கை இழக்கலாம். ஐநா மனித உரிமைகள் பேரவையில் உள்ள இந்த விவகாரம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கும் செல்லலாம் எனவும், சர்வதேசத்தின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு எனவும் எச்சரித்துள்ளார். உலகிலேயே மிகவும் கீழ்த்தரமான சித்திரவதை முறைமை இலங்கையில் காணப்படுகிறது என குறிப்பிட்ட எமர்சன் குறித்த சித்திரவதைகளையும் பட்டியலிட்டார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து 8 ஆண்டுகள் நிறைவடைந்த பின்பும் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் பல்வேறு ஏமாற்றுத் திட்டங்களை, இழுத்தடிப்புக்களை நேரில் அம்பலப்படுத்தினார் எமர்சன்.

அரசியல் அமைப்பை திருத்துவதற்கு பொதுமக்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டு, அரசியலமைப்பை உருவாக்குவதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டு இதற்கென பெருந்தொகைப் பணமும் நேரமும் செலவழிக்கப்பட்டு இறுதியில் மகா நாயக்க தேரர்களின் சம்மதமில்லாமல் தம்மால் ஓரடி கூட எடுத்து வைக்க முடியாது எனவும், பௌத்தத்திற்கே முன்னுரிமை, ஒற்றையாட்சி அப்படியே அமுலாகும் என ஜனாதிபதியும், பிரதமரும் கூறியுள்ளனர். இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து தமிழ் மக்களையும் சர்வதேசத்திலுள்ள ஜனநாயக சக்திகளையும் ஏமாற்ற மீண்டும் மீண்டும் அரங்கேற்றப்படும் செயற்பாடே இது. இது ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்று தான். சிங்கள அரசைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தின் அழுத்தம் இல்லாமல் இனப்பிரச்சனையைத் தீர்க்கப் போவதில்லை. ஒன்றுக்கும் உதவாத மாகாண சபை கூட இந்தியாவின் அழுத்தத்தினாலேயே உருவாக்கப்பட்டது. இவ்வாறான ஏமாற்றுதலுக்குத் துணை போவதிலிருந்தும் ஏமாற்றப்படுவதிலிருந்தும் சர்வதேசம் விடுபடவேண்டும். ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சனின் கூற்றுக்கள் தமிழரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களாலும் சர்வதேச ஜனநாயக சக்திகளாலும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. அவற்றைக் கருத்திற் கொண்டு அவர்கள் தமது செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென தமிழ்மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

- செ. கிரிசாந் -

## நிமிர்வு வாசகர்களே

தொடர்புகளுக்கு...

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com

அட்டைப்படம் : சண்முகம் தவசீலன்

## கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்கட்சிகள் ஓரணியில் இணைய வேண்டும்

# வலுப்பெற்றுவரும் கோஷம்!

-பாண்டிருப்பு கேதீஸ்-

இழந்தது போதும் இனி இழப்பதற்கு எதுவும் இல்லை எனும் மனவிரக்தியில், அரசியல் ரீதியான நிரந்தர தீர்வும் எட்டப்படாத நிலையில் தொடர் சோதனைகளோடு நகர்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள், காலத்திற்கு காலம் குறைவில்லாமல் தேர்தல்களையும், வாக்குறுதிகளையும் மாத்திரம் சந்திக்கின்றார்கள். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண தமிழ் மக்களிடமும், பொதுசிந்தனைவாதிகள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் என எல்லோரிடமும் பொதுவான கருத்து ஒன்று மேலோங்கி வருவதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் கட்சிகள் பிரிந்து பிரிந்து போட்டியிட்டு தமிழர்கள் வாக்கு சின்னாபின்னமாக்கப்படாமல் அனைத்து தமிழ் கட்சிகளும் புரிந்துணர்வுடன் ஒரு அணியில் போட்டியிட்டு கிழக்கு மாகாணசபையை ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணமும், எந்தக் கட்சிக்கும் சார்பாக இல்லாமல் மக்கள் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சேவை செய்யக்கூடிய ஆளுமைமிக்க தமிழர் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய்யப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்புமே பரவலாக காணப்படுகிறது.

தமிழ்மக்கள் மத்தியில் ஒரு சிறந்த தலைமைத்துவம் இல்லாத ஒரு வெறுமை உணர்வை 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் நோக்கமுடிகிறது. இந்த நிலைமை கிழக்கு மாகாணத்தில் ஒரு படி மேலாக உள்ளது என்றே கூறலாம். இந்த ஆதங்கத்தினை மக்களிடத்திலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் முயற்சியினால் ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளின் கூட்டாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது யாவரும் அறிந்த விடயமே. இக்கட்சி சிறந்த கட்டுக்கோப்போடு வழிநடத்தப்பட்டதனால் தமிழ் மக்களின் அமோக ஆதரவும் கிடைத்தது. வடக்கு கிழக்கில் தொடர் வெற்றிகளையும் பெற்றுவந்தது. ஆனால் மக்கள் ஆதரவை, மக்கள் வைத்த நம்பிக்கையை 2009 ஆம் ஆண்டின் பின்னர் அதே நிலையில் தக்க வைத்துக் கொள்ளத் தவறியுள்ளதா எனும் கேள்வியும் எழுந்த வண்ணமே உள்ளது. இந்தக் கேள்விக்கு பதில் கூறவேண்டிய பொறுப்பு தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் உள்ளது.

தற்போது மக்கள் மத்தியில் இக்கட்சிகள் பல்வேறு வகையான விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளதுடன் மக்களிடம் உள்ள இவர்களுக்கான ஆதரவும் சரிந்துவருவதனை உணரமுடிகிறது. இவ்விடயத்தினை இங்கு குறிப்பிடுவதன் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குறைசொல்வது நோக்கமல்ல. ஆனால் கிழக்கில் எதிர் கொள்ளவிருக்கும் தேர்தலில் எந்த வகையிலும் தமிழர் வாக்குகள் சொற்பளவும் பிரிபடக்கூடாது என்பதற்காகவும் தமிழர் வாக்குகள் பிரிபடாமல் தமிழர் ஒருவர் இம்முறை முதலமைச்சராக வருவதனை ஒவ்வொருவரும் உறுதிசெய்ய வேண்டியது அவசியம் எனும் மனநிலை அனைவரிடமும் உருவாகியுள்ளதன் வெளிப்பாடே அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் எனும் கோஷம் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு வெளியானதன் பின்னர் மக்கள் மத்தியில் வலுப்பெற்றுவருவதற்கு காரணமாகும்.

கிழக்கு மாகாணத்தில் 40 சதவீதம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். கடந்தமுறை அதிக ஆசனங்களை பெற்ற கட்சியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இருந்தபோதும் முதலமைச்சர் பதவியினை தாங்கள் விட்டுக் கொடுத்திருந்தார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர் பிரதேசத்தில் காணப்படும் பல முக்கிய பிரச்சனைகளுக்கு இந்த விட்டுக்கொடுப்புகளின் பின்னரும் தீர்வுகள் காணப்படவில்லை. உதாரணமாக கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்திற்கென தனியான கட்டிடம் உள்ளது, தனி நிருவாகம் இயங்குகிறது. ஆனால் அதனை நிரந்தரமாக்கும் முயற்சி கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதுடன் பல்வேறு வழிகளில் தடைகளும் போடப்பட்டே வருகின்றன. இவ்வாறு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பல விடயங்களில் நெருக்குதல்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**கிழக்கில் விட்டுக்கொடுப்புடனும் மத்தியில் இணக்க அரசியலிலும் ஈடுபடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தப் பொறுப்பை செய்து முடிக்க தவறிவிட்டது என்ற ஆதங்கமும் இம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. எனவே கடந்த முறை முதலமைச்சர் பதவியினை விட்டுக் கொடுத்தோம். இம்முறை தமிழர் ஒருவர் முதலமைச்சராக வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் உள்ள கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மத்தியில் அனைத்து தமிழ்கட்சிகளும் ஓரணியில்போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.**

# பெரும்பான்மை இனத்தின் அடிமைகளாகிவிடுமா வருங்காலச் சந்ததி?



-வைரமுத்து சொர்ணலிங்கம்-

போராட்ட காலத்தில் நிலையான வதிவிடமின்றி ஒழுங்கான உணவு உடை இன்றி மிகவும் அவதிப்பட்ட மக்களுக்கு இனிமேலாவது நல்ல வாழ்க்கை அமைய உதவவேண்டுமென்பது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலருக்குமுள்ள எண்ணமாகும். ஆனால் போராட்டம் முடிந்த கையோடு தமிழர்களின் பொருளாதாரத்தை சிதைப்பதும் கலாச்சாரத்தை ஒழிப்பதும் கொள்கைகளாக வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மூலைக்கு மூலை சாராயக் கடைகள் திறக்கப்பட்டன. போதைப்பொருள் பாவனை ஊக்குவிக்கப்பட்டது. விபச் சாரம் முடுக்கி விடப்பட்டது. தமிழர் தாயகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தாம் மெல்ல மெல்ல அழிக்கப் படுகின்றோம் என்பதை உணராமலேயே அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போராட்ட காலத்தில் தாயக மக்களின் இன்னல்களைப் போக்க நிதியுதவி புரிந்த புலம்பெயர் உறவுகளிடமிருந்து தொடர்ந்தும் நிதி உதவி களை எதிர்பார்த்து கையேந்துகிறார்கள்.

2013 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கிய வடமாகாண அரசும் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் தமக்குள்ளே முரண்பட்டு நிற்கிறார்கள். புலம்பெயர் மக்களின் நிதிப் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட தொழில் ஸ்தாபனங்களோ அன்றி தனியார் முயற்சியில் உருவாக்கப்பட்ட தொழிற் சாலைகளோ எவற்றினதும் தரவுகளின்றி தமது மாகாணத் தில் என்ன நடக்கின்றது என்பதை தெரிந்து கொள் ளாமலேயே மாகாண அரசு தனது காலத்தை ஓட்டி வரு கின்றது.

படித்த தமிழ் பட்டதாரிகளும் இளைஞர்களும் ஒன்றில் ஏதாவது ஒரு வெளிநாடு போகவேண்டும் என்ற கனவோடு இருக்கிறார்கள் அல்லது அரசாங்க உத்தி யோகத்தை எதிர்பார்த்து காலத்தை ஓட்டுகிறார்கள். தமக்கு வேலை வேண்டும் எனப் போராடும் பட்டதாரி இளைஞர்கள் தனியார் ஸ்தாபனங்களில் வேலைக்காக கோரப்படும் விண்ணப்பங்களைத் திரும்பிக்கூடப் பார்ப் பதில்லை. அரசாங்கத்தில் கொடுக்கப்படும் சம்பளத்திலும் பார்க்க இரண்டு மடங்கு தனியார் ஸ்தாபனத்தில் கொடுத் தாலும் வேலையில் சேர பட்டதாரிகள் தயாராக இல்லை. அதற்கு சிலர் கொடுத்த விளக்கம் அரசாங்க உத்தி யோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யாவிட்டாலும் சம்பளம் கிடைக்கும். ஆனால் தனியார் ஸ்தாபனத்தில் கோரப்படும் வேலைகளை அன்றன்றே செய்து முடிக்க வேண்டும். கடுமையான உழைப்பு எதிர்பார்க்கப்படும். ஆனால் அந்த உழைப்புக்குரிய ஊதியம் அங்கு கொடுக்கப் படும் என்பதையும் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அப்படியானால் தமிழர்கள் உழைத்து வாழ பின்னிற் கிறார்களா?

ஆனால் புலம்பெயர்ந்து வந்த தமிழர்கள் கடும் உழைப்பாளிகளாக தெரிகின்றார்களே. அவர்கள் அகதிகளாக வந்த காரணத்தால் தாயகத்தில் அவர்கள் படித்த படிப்பையும் பட்டத்தையும் வைத்து அவர்களால் எந்த உத்தியோகத்தையும் பெறமுடியவில்லை. புலம் பெயர் நாடுகளில் அரசாங்க உத்தியோகமென்றால் அந் நாட்டின் குடிமகனாக இருக்க வேண்டும். தொழில் செய் வதற்கான சான்றிதழ் பெறவேண்டுமானால்கூட வதிவிட உரிமை பெற்றிருக்க வேண்டும். 90 வீதமான தமிழர் கள் தொழிற்சாலைகளிலேயே வேலை செய்து அவ் வேலையை நன்கு படித்து தாமே ஒரு தொழில் ஸ்தாபனத்தை உருவாக்கி உயர்ந்தவர்கள். ஒரு குறுகிய காலத்தில் தனிப்பட்டமுறையில் தொழிலதிபர்களாக உயர்ந்து மில்லியனர்களாகவும் ஏன் பில்லியனர்களாகக் கூட இருக்கிறார்கள் ஈழத் தமிழர்கள். அந்த இனம்தானே தாயகத்திலும் இருக்கிறது? அங்கு மட்டும் ஏன் அரசாங்க வேலைதான் வேண்டும் என மக்கள் அடம்பிடிக்கிறார்கள்?

இன்றைய தலைமுறையாக புலம்பெயர்ந்து வாழ்ப வர்கள் அனைவரும் தாயத்தில் வாழ்ந்து அந்த அனுபவங் களோடு உணர்வுகளோடு இடம்பெயர்ந்தவர்கள். அந்த

மண்ணின் பெருமையையும் இன்று அதுபடும் வேதனையையும் உணர்ந்தவர்கள். தமது உறவினரோ நண்பர்களோ இடரில் தவிக்கும்போது, உதவிநாடி கரம் நீட்டும்போது அதைப் புரிந்துகொண்டு தம்மாலான உதவியைச் செய்யவேண்டும் என நினைப்பவர்கள். ஆனால் அடுத்த சந்ததியான அவர்களின் பிள்ளைகளுக்கு அந்த உணர்வு இருக்கப் போவதுமில்லை, ஈழத்தில் இருக்கும் அடுத்த சந்ததியை தெரியப் போவதுமில்லை. ஆகவே இன்று இளைஞர்களாக, இளம் பெற்றோர்களாக இருப்போரின் பிள்ளைகளுக்கு புலம்பெயர்ந்த சமூகத்திடமிருந்து எந்த உதவியும் கிடைக்கப் போவதில்லை. அதே நேரத்தில் உழைக்காமல் எந்த முயற்சியும் எடுக்காத பெற்றோரைப் பார்த்து வளரும் பிள்ளைகள் உழைக்கலாம், முன்னேறலாம் என்ற உண்மையை உணராமலே வளர்ந்து மற்றவரிடம் கையேந்தி வாழவேண்டிய நிலை ஏற்படலாம்.

புலம்பெயர் உறவுகளும் உதவாத போது தான் வாழும் நாட்டிலே மற்ற இனங்களிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். 60களிலே பணம் படைத்த வடகிழக்கு தமிழர்களின் வீடுகளில் வறிய சிங்கள மக்கள் வேலைக்காரர்களாக இருந்தார்கள். 80களிலே பணம் படைத்த சிங்கள வீடுகளில் வறிய மலையகத் தமிழர் வேலைக்காரர்களாயிருந்தார்கள். இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் ஈழத் தமிழரும் சிங்கள வீடுகளில் வேலைக்காரர்களாயிருக்கும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இந்த தூரநோக்கு பார்வை தாயகத்திலிருக்கும் தமிழர்களிடமும் இல்லை, தமிழ் தலைவர்களிடமுமில்லை.

**“60களிலே பணம் படைத்த வடகிழக்கு தமிழர்களின் வீடுகளில் வறிய சிங்கள மக்கள் வேலைக்காரர்களாகவும், 80களிலே பணம் படைத்த சிங்கள வீடுகளில் வறிய மலையகத் தமிழர் வேலைக்காரர்களாகவும், இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் ஈழத்தமிழரும் சிங்கள வீடுகளில் வேலைக்காரர்களாயிருக்கும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.”**

தாயக மக்களுக்கு உதவ வேண்டும் என புலம்பெயர் மக்கள் துடிக்கிறார்கள் ஆனால் எப்படிச் செய்வதென தெரியவில்லை. அன்றாட வாழ்க்கைக்கு பணம் கொடுப்பது பிச்சை போடுவது போலாகும். அவர்கள் உழைத்து வாழ்வதற்கு தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என சிலர் முனைந்தார்கள். ஆனால் உழைப்பதற்கு எவரும் முன்வராததால் தொழிற்சாலைகள் இழுத்து மூடும் நிலைக்கு தள்ளப்படுகின்றனவே. இரு உதாரணங்கள்.

கனடாவிலே பிரதான வர்க்கத்தோடு தொழில் புரியும் தொழிலதிபர் வடக்கில் கொங்கிறீற் தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்ய ஒரு தானியங்கி இயந்திரத்தை கொள்வனவு செய்து அதற்கு தேவையான இதிரி இயந்திரங்களையும் வாங்கி 56 மில்லியன் ரூபா செலவில் மிஸ்டர் கொங்கிறீற் என்ற நிறுவனத்தை புலோலியில் ஆரம்பித்தார். அதன் உற்பத்திக்கு வடக்கு மட்டுமல்ல தெற்கிலிருந்தும் ஓடர்கள் வந்தபோதும் அதில் வேலை செய்ய ஆட்களில்லாமல் திண்டாடியபோது சிலரின் ஆலோசனைப்படி சில சிங்கள இளைஞர்களை வேலைக்கமர்த்தினார். தீர்வு கிடைத்தது. படிப்படியாக மேலதிக சிங்கள இளைஞர்கள் வந்து சேர்ந்து இன்று 100க்கும் அதிகமான சிங்கள இளைஞர்கள் அங்கே தங்கியிருந்து வேலை செய்கிறார்கள். தமக்கு அரசாங்க வேலை வேண்டும் என்று தமிழ் பட்டதாரிகள் போராட்டம் நடத்துகையில் தமிழ் பகுதியொன்றில் உள்ள தொழிற்சாலையொன்றில் சிங்கள இளைஞர்களை தேடிப்பிடித்து வேலைக்கமர்த்த வேண்டிய நிலை.

இன்னொன்று வல்லையிலியங்கும் ஆடைத் தொழிற்சாலை. புலம்பெயர்ந்து வாழும் உடுப்பிட்டி மக்கள் அந்த ஊரைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும் என 30 இயந்திரங்களைக் கொண்ட ஆடைத்தொழிற்சாலை ஒன்றை உருவாக்கினார்கள். ஆனால் அதை கொண்டு நடத்துவதற்கு படித்த இளைஞர்கள் முன்வராததாலும் தைப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் வராததாலும் எமது மக்களின் உழைப்புக்கு ஆதரவு தந்து தைத்த உடுப்புக்களை வாங்கி விற்க ஆடை விற்பனை நிலையங்கள் முன்வராததாலும் அந்த ஆடைத் தொழிற்சாலை ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. தமிழர் தாயகத்திற்கான ஆடைத் தேவைகள் யாவும் தெற்கிலிருந்தே வருகின்றன. அதை வடக்கில் உற்பத்தி செய்வதானால் வல்லைபோல் 100 தொழிற்சாலை போடலாம். அதை வர்த்தகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆடைத்தொழிற்சாலையை இலாபகரமாக நடத்துவதானால் தெற்கிலிருந்து தொழிலாளிகளை வருவியுங்கள் என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அப்படியானால் யாருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு புலம்பெயர் மக்கள் பணத்தை இறைக்கிறார்கள்?

**தாயகத்து மக்கள் விழிப்படையாவிட்டால் எமது முன்னோர்கள் உழைத்து முன்னேறியவர்கள் என்பதை புரிந்து கொண்டு கடுமையாக உழைக்கத் தவறினால் அவர்களது வருங்காலச் சந்ததி அந்த நாட்டிலேயே பெரும்பான்மை இனத்தின் அடிமைகளாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். ஏனென்றால் பிள்ளைகளின் முன்மாதிரிகள் பெற்றோர்களே.**

# தமிழ்த் தேசியத்தை அழித்தொழிக்கும் பயணம்



-வி.தேவராஜ் - மூத்தபத்திரிகையாளர்

தமிழ்த் தேசியமும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளும் தகர்ந்து போவதில்லை. அவை நீறு பூத்த நெருப்பாகவே தமிழ் மக்களின் மனதில் கனன்று கொண்டிருக்கின்றன என்பதற்கு சுதந்திர இலங்கையின் வரலாற்றில் பல பதிவுகளைக் காணலாம். இந்தப்பதிவுகள் அனைத்துமே ஒரு விடயத்தை அதாவது தமிழ்த்தேசியம் தொடர்பாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்து தெளிவான, உறுதியான செய்தியை திரும்பத் திரும்பக் கூறுகின்றன. அதாவது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான போராட்ட வடிவங்கள் காலத்துக்கு காலம் மாறியுள்ளன. போராட்ட வடிவங்கள் மாறின என்பதற்காக அரசியல் அபிலாசைகள் மாறிவிடவில்லை என்பதுதான் உண்மை.

ஆனால் தமிழ் மக்களின் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கின்ற அரசியல் அபிலாசைகளை அழித்து விட சிங்கள பௌத்த பெருந்தேசியவாதமும், வெளி நாட்டுச் சக்திகளும் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. உண்மையில் தமிழ் மக்களிடமிருந்து எழுந்த போராட்ட வடிவங்களைத் தமது கூட்டுச்சதி மூலம் இவர்கள் வெற்றி கொண்டுள்ளனர். இந்த வெற்றிகள் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அழித்து விட முடியவில்லை என்பது மேற்படி சக்திகளுக்கு நன்கு தெரியும். அதற்கேற்ப மேற்படி சக்திகளும் காலத்துக்குக் காலம் தமது தந்திர மூலோபாயங்களையும் செயற்பாடுகளையும் மாற்றி அமைத்து வருகின்றன.

அந்த வகையில் தமிழ் மக்களுக்கெதிரான கூட்டுச் சதிகாரர்களின் நயவஞ்சக இராஜதந்திர நகர்வுகளை மேவி மாற்று வழியில் தமிழ் மக்களை வழி நடத்தக் கூடிய சக்தி தமிழ்த் தலைமைத்துவங்களிடையே இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்த் தலைமைத்துவங்களுக்குள் விதி விலக்காக அமைந்த போதும் இலங்கை மற்றும் வெளிநாட்டுக் கூட்டுச் சதி மூலம் அழிக்கப்பட்டுவிட்டனர்.

தமிழ்மக்களை இந்த அழிவில் இருந்து அதாவது முள்ளிவாய்க்கால் அழித்தொழிப்பில் இருந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் காப்பாற்றுவர் என்ற மாயைக் குள் தமிழ் மக்கள் ஆழ்ந்தனர். துப்பாக்கிச் சன்னங்களால் அல்ல வாக்கு வேட்டுக்களால் தமிழ் மக்களுக்கு விடிவு, விமோசனம் கிடைக்கும், அவற்றைப் பெற்றுத் தருவோம், இவைகளை வென்றெடுக்க நாடாளுமன்றப் பிரதிநிதித்து வங்களை வாரித் தாருங்கள் என்ற தேர்தல் பரப்புரைக்குள் வென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நாடாளு மன்றம் நுழைந்தனர். ஆனால் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பினரின் நாடாளுமன்றப் பிரவேசம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான பயணத்தை விரைவுபடுத்துவதாகவோ அல்லது உறுதிப் படுத்துவதாகவோ அமையவில்லை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிகளாக இருப்பவர்களில் ஒரு பகுதியினரின் செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

1977இல் அடுத்த தேர்தல் தமிழீழத்தில் என மக்கள் ஆணை கோரி வெற்றி பெற்ற பின் எவ்வாறு தமிழ் மக்கள் கைவிடப்பட்டனரோ அதே போல் இன்றும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு விடிவு, விமோசனம், சமஷ்டி மூலமான தீர்வு என்றெல்லாம் கூறி நாடாளுமன்றம் புகுந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களைக் கைவிட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களைக் கைவிட்டமை என்பது தற்செயல் நிகழ்வு அல்ல. கூட்டமைப்பினரின் கையாலாகத்தனம், இயலாமை என்பவற்றின் வெளிப்பாடாகவும் இந்த நிலை உருவாகி விடவில்லை.

தமிழீழவிடுதலைப்புலிகளை அழித்துவிட வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச் செய்ய வேண்டுமென்ற இலங்கை அரசாங்கத் தினதும், வெளிநாட்டுச் சக்திகளினதும் கூட்டுச் சதியின் தொடர்ச்சியாகவே கூட்டமைப்பினரின் போக்கும், செயற் பாடுகளும் அமைந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஊடகங்களில் புற்றீசல் போல் தகவல்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதாவது கூட்டமைப்பினரில் ஒரு பகுதியினர் தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் கூட்டுச்சதியில் பங்களராகச் செயற்பட்டமை குறித்த தகவல்களும் ஊடகங்களில் கசிந்துள்ளன. தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பைச் சார்ந்தவர்களே இத்தகைய தகவல்களுக்குச் சொந்தக்காரர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளில் பிளவினை ஏற்படுத்துவதில் இலங்கையுடன் இணைந்து சர்வதேச சக்திகள் வெற்றி பெற்றன. இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்பே கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் ஒரு பகுதியினர் கூட்டுச்சதிக்கு ஒத்திசைவான வர்களாக, பங்காளர்களாக இருந்திருக்கின்றனர்.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந் துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது கொழும்பில் நிலை கொண்டுள்ள வெளிநாட்டுத் தூதரக உயர் அதிகாரி ஒருவரின் வாசஸ்தலத்தில் விருந்துபசாரம் ஒன்று ஏற் பாடாகி இருந்தது. அந்த விருந்துபசாரத்தில் கூட்ட மைப்பின் முக்கிய தலைவர்கள் பலர் பங்குபற்றினர். இவர்களில் ஒருவர் ஆங்கிலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை சரமாரியாக விமர்சித்துப் பேசினார். விருந்து பசாரத்தில் கலந்து கொண்ட அனைவரது கண்களும் அந்தத் தலைவரை நோக்கித் திரும்பின. அவருடைய உரை எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது மாத்திரமல்ல விரைவில் அந்த தமிழ்த் தலைவர் கூட்டமைப்பில் இருந்து விலகப்போகிறார் என்ற செய்தியை எனக்கு உணர்த் தியது. நான் எதிர்பார்த்தது போல் குறிப்பிட்ட தமிழ்த் தலைவர் குறுகிய காலத்தில் கூட்டமைப்புடனான உறவி னைத் துண்டித்துக் கொண்டார்.

இவரது உரை முடிந்தவுடன் இன்னொரு ஆச்சரியம் அங்கு நிகழ்ந்தது. கூட்டமைப்பின் முக்கிய தலைவர் களில் ஒருவர் விடுதலைப்புலிகள் மீது விமர்சனங் களை முன்வைத்தவரைக் கட்டித்தழுவி “நீ வெளிப்படை யாகப் பேசுகின்றாய். நான் மௌனமாக இருக்கின்றேன்” என்று கூறிவிட்டு விருந்து நடைபெற்ற வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறினார். அவ்வாறு வெளியேறியவர் இன்று வரை கூட்டமைப்பில் முக்கிய தலைவர்களில் ஒரு வராக இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் கூட்டமைப்பில் ஒரு பகுதி யினர் விடுதலைப் புலிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு 2002 ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்தே இலங்கையுடனான சர்வதேசத்தின் கூட்டுச்சதியில் வெளித் தெரியாத பங்காளர்களாக இருந்து வந்துள்ளனர் என்பது புலனாகின்றது. 2004ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலி களில் பிளவினை ஏற்படுத்தி கருணாவைப் பிரித்தெடுத்து உலகமே வியந்து நின்ற ஒரு போராட்ட இயக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

தற்போது இலங்கையினதும் சர்வதேச சக்திகளினதும் கூட்டுச் சதி ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மீதும் திரும்பி யுள்ளது. தமிழ்த்தேசியத்தை சிதைக்கும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச்செய்யும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் முக்கிய பங்காளராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஒரு பிரிவினர் வெளிப் படையாகவே களம் இறக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரிவினர் இலங்கையில் சிங்களத்தலைமைத்துவங்களின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, இன்றைய நல்லாட்சி யின் தலைவர்களுடன் மிகவும் நெருக்கமானவர்கள். அன்று கருணா அம்மான். இன்று கூட்டமைப்பின் ஒரு பகுதியினர்.

2010ஆம் ஆண்டில் அதிவணக்கத்துக்குரிய இராஜப்பு ஜோசப்பு அவர்கள் “முள்ளிவாய்க்கால் அழிவைவிட மிக மோசமான முள்ளிவாய்க்கால் அழிவை தமிழ் மக்கள் எதிர்கொள்ளப் போகின்றனர்” என்று குறிப்பிட்டிருந்தார். இந்த முள்ளிவாய்க்கால் அழிவு ஒட்டுமொத்த தமிழினத் தின்இருப்பு,பாதுகாப்பு, தாயகக்கோட்பாடு, சுயகௌரவம், அரசியல்அபிலாசை அனைத்தையும்கேள்விக்குறியாக்கி விடும் என்றும் அதிவணக்கத்துக்குரிய அடிகளார் சுட்டிக் காட்டியிருந்தார்.

இன்று அந்த நிகழ்ச்சி நிரலினை நிறைவேற்று வதில் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் களமிறங்கி யுள்ளனர். மக்களின் பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்துடன் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் பயணத்தை ஆரம்பித்து விட்டனர். தமது நிகழ்ச்சி நிரலுக்கு தமிழ் மக்களிடையே உள்ள அனைத்து சக்திகளையும் இலங்கையுடனான சர்வ தேச கூட்டுச்சக்திகளின் துணையுடன் எதிர்கொள்ளவும் துணிந்துவிட்டனர். இவர்களின் முதலாவது இலக்காக வடமாகாண முதலமைச்சர் உள்ளார்.

**இந்தக் கூட்டுச் சதி மூலம் தோற்றுப் போவது தமிழ் மக்களோ அல்லது தமிழ்த் தேசியமோ அல்லது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளோ அல்ல என்பதனை காலம் இவர்களுக்கு நிச்சயம் உணர்த்தும்.**

**“தர்மத்தினை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்” இது தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.**

# யாப்பு: மாகாணசபைகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் வருமான சேகரிப்பு

**மைத்திரி அரசினால் உருவாக்கப்பட்ட அரசிய லமைப்பு சபையின் வழிப்படுத்தல் குழு பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமையில் உபகுழுவை நியமித்தது. அது இலங்கையின் புதிய அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டிய விடயங்கள் தொடர்பில் விதப்புரைகள் கொண்ட அறிக்கையொன்றை 2016 இறுதியில் வெளியிட்டது. அதில் முதலிரு பகுதி களும் கடந்த இரு இதழ்களில் வெளியிடப்பட்டன. மூன்றாவது பகுதி இவ்விதழில் வெளியாகிறது.**

**மாவட்ட செயலகங்கள் எவ்வாறு மாகாண சபைகளூடாக நடைபெறவேண்டிய அதிகாரப் பரவலாக்கலை கீழறுக்கின்றன என்பதனையும் மாகாண சபைகளின் வருமான சேகரிப்பு பொறிமுறையிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக மத்திய அரசாங்கம் மாகாணசபைகள் உள்ளூராட்சி சபைகளுக்குடையே யான உறவுகள் தொடர்பில் புதிய யாப்பில் இடம் பெற வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் அறிக்கையில் சொல்லப்பட்டவற்றை இவ்விதழில் பார்ப்போம்.**

**– ஆசிரியர்.**

ஒரு புறத்தில் மத்திய அரசாங்கத்தின் கீழ் மாவட்ட செயல கங்களும் பிரதேச செயலகங்களும் உள்ளன. மறு புறத்தில் மாகாண சபைகளின் கீழ் உள்ளூராட்சி சபைகள் உள்ளன. மத்திய அரசாங்கத்திடம் நேரடி யாக அதிகாரத்தைப் பெறும் மாவட்டச் செயலாளர் களும் பிரதேச செயலாளர்களும் மிகவும் சக்தி வாய்ந் தவர்களாக இருக்கின்றார்கள். 13ஆம் திருத்தத் தில் குறிக்கப்பட்டபடி உள்ளூராட்சி சபைகளுக்கு பரவலாக் கப்பட வேண்டிய அதிகாரங்கள் மாவட்டச் செயலாள ரூடாக இன்றும் மத்திய அரசாங்கத்திடமே உள்ளன.

யதார்த்தத்தில் மாகாணப் பணியாளர்களில் பெரும்பான் மையினர் பிரதேசசெயலகத்தில் கடமையாற்றுவதுடன் நிர்வாக ரீதியாக பிரதேச செயலாளர்களின் கட்டுப் பாட்டிலேயே உள்ளனர். மேற்குறித்த சிக்கல் தன்மை காரணமாக மாவட்டச் செயலாளர்களும் பிரதேச செய லாளர்களும் மாகாண நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என குழு உறுப்பினர்கள் ஆலோசனை முன்வைத்தனர். பின்வரும் விதப்புரைகள் இக்குழுவால் முன்வைக்கப்படுகின்றன.

1. மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகமானது மாகாண நிர்வாகத்தின் அங்கமாகும் வகையில் மீள்கட்ட மைக்கப்படல் வேண்டும்.
2. மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்குள் வரும் செயற் பாடுகளை நிறைவேற்ற மாகாண அமைச்சின் கீழ் உள்ள மாவட்டச் செயலாளர்களையும் பிரதேச செயலாளர்களையும் இயலச் செய்ய வேண்டும்.

**வருமான சேகரிப்பு:**

மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங் கள் மிகவும் வரையறுக்கப்பட்ட நிதி வளங்களையே கொண்டுள்ளன. இந்த மாகாணங்கள் செலவுகளைச் சமாளிப்பதற்கு அரசாங்க மானியங்களிலேயே தங்கி யுள்ளன. நிதி ஒதுக்கீட்டுக்கான பரவலாக்கமின்றி அரசிறைப் பரவலாக்கம் அர்த்தமற்றதாகும்.

மாகாணங்களுக்கு வழங்கப்படும் மூலதனச் செலவிற்கான ஒதுக்கீடு எந்த மாவட்டத்துக்கு எவ்வளவு தொகை என்ற குறிப்புரையுடனேயே வழங்கப் படுகிறது. ஆளுனரின் விதப்புரையின்றி மாகாண நிதியிலிருந்தான செலவுகளுடன் தொடர்புடைய எத்தகைய சட்டங்களையும் மாகாணசபை நிறைவேற்ற முடியாது. மாகாணசபைகள் நிதி தொடர்பில் ஆளுனருக்கு உள்ள தடையற்ற அதிகாரத்தினால் அதிகாரப்பரவலாக்கம் என்ற எண்ணக்கரு இல்லாதொழிக்கப்படுகிறது.

13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் வியாபாரப் புரள்வு வரியை சேகரிப்பதற்கான தகுதி மாகாண சபை களுக்கு உள்ளது. ஆனால் மத்திய அரசாங்கம் பெறு மதிசேர்வரியை (VAT) அறிமுகப்படுத்தியதன் காரணமாக மாகாண சபைகள் தமது வியாபாரப் புரள்வு வரி வரு மானத்தை இழந்தன.

மாகாணசபைகள் வருமானம் ஈட்டுவதற்காக வரி சேகரிப்பு, கடன்களைப் பெற்றுக்கொள்ளல், முதலீடுகள், வெளிநாட்டு உதவிகளை நாடல் என்பவற்றில் ஈடுபடுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி அதிகார சபைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளூராட்சி சபைகளுக்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசாங்கத்திடமே உள்ளது. இவ்வாறான குறைபாடு களைக் கொண்ட நிதி ஒழுங்கமைப்பானது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்க காரணமாகிறது.

செலவிடுவதற்கு உண்மையில் பொறுப்புள்ள மக்கள் வருமானத்தை ஈட்டக்கூடிய மக்களாகவும்

**(12 ஆம் பக்கம் பார்க்கவும்)**



# போர் பதட்டங்களுக்கு பின்னாலுள்ள அரசியல்

இன்றைய உலகம் ஒரு பாரிய யுத்தத்தை நோக்கி நகர்கின்றதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. அனைத்துப் பிராந்தியங்களிலும் போர்ப் பதட்டம் நிலவிக் கொண்டே இருக்கின்றது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பு பாரிய யுத்தங்களின்றி சிறிய யுத்தங்கள் அவ்வப் போது நிகழ்ந்து வந்தன. அதே சூழல் இன்றும் காணப்படு கின்றதா, அல்லது வல்லரசுகள் அணுவாயுதத்திற்கு அஞ்சுகின்றனவா என்ற சந்தேகங்கள் மேலெழுந்துள்ளன.

புதிய உலக ஒழுங்கு 1989 இல் உருவாகியது. அப் போது அமெரிக்கா தனிவல்லரசாக பேரெழுச்சி பெற்றது. 2001 செப்ரெம்பர் தாக்குதலுக்கு பின்பு அமெரிக்காவின் பொருளாதாரம் சரிவடையத் தொடங்கியது. 2008 ஆம் ஆண்டு நிதி நெருக்கடியுடன் அமெரிக்கப் பொருளா தாரம் ஆட்டங்காண படிப்படியாக உலகப் போட்டியில் வேறு சக்திகள் முனைப்புச் செலுத்த ஆரம்பித்தன. இது உலகில் பலதுருவ அரசியலை ஏற்படுத்த முனைந் தது. அதில் வன் அதிகாரத்தின் செல்வாக்கு குறைந்து மென் அதிகார உத்திகள் முதன்மையடைய ஆரம்பித்தன. அதில் சீனா அதிக கரிசனை கொண்டது. ஆனாலும் அமெரிக்கா தனது அரசியல் – இராணுவ பலத்தை யும் நிறுவனமயப்படுத்தப்பட்ட உலகளாவிய கட்ட மைப்பையும், நாணயத்தின் வலிமையையும் கொண்டு தனது நிலையை பலப்படுத்த முயலுகிறது. எனவே இன்றைய உலகமானது அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன், இந்தியா, ஜப்பான் என்ற பல அரசுகளின் ஒழுங்குக்குள்ளால் இயங்குகிறது.

ஆனாலும் அமெரிக்கா தனது பிடியைத் தக்க வைக்கவும் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் முயலத்தவறவில்லை. இதனால் உலகில் ஒரு பாரிய வெற்றிடம் ஏற்படக்கூடிய நிலையை நோக்கி பல நாடுகள் காத்திருக்கின்றன. சீனா மென்அதிகார வெற்றிக்காக காத்திருக்கின்றது. இதனால் ஒரு போர்ப்பதட்டத்தை பிறநாடுகளுக்கூடாக கையாள முனைகிறது. அதில் ஒன்றாகவே வடகொரியாவின் போர் நடவடிக்கையை நோக்க முடியும்.

கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்

சிரிய விவகாரம் அமெரிக்க–ரஷ்யப் பதட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அதுவும் ஏறக்குறைய ஒரு யுத்தத் திற்கான பதட்டத்தை ஏற்படுத்தியது. அதனால் ஏற்பட்ட அச்சுறுத்தல் பிராந்திய மட்டத்தில் மட்டுமல்லாது அதனைக் கடந்தும் ஐரோப்பாவுக்குள்ளும் பதட்டத்தை தந்தது. அது ஒரு தொடர்ச்சியான நடைமுறையாகவே காணப்படு கின்றது. ஐரோப்பாவும், ஐ.எஸ் மீதான தாக்குதலைப் பற்றிய தீவிரத்தை முதன்மைப்படுத்த முயலுகிறது.

அடுத்து கட்டார் விவகாரமும் மேற்காசியாவில் ஒரு போர்ப் பதட்டத்தை தந்துள்ளது. மேற்காசிய நாடுகளை அமெரிக்கா தூண்டிவிட்டதன் பிரதிபலிப்பாக கட்டார் விடயம் அமைந்துள்ளது. கட்டார் மீது எத்தகைய அழுத்தத்தினை கொடுத்தாலும் அதன் இருப்பினைப் பாது காக்கும் உத்திகளை அது கொண்டிருப்பதனால் கட்டார் சரணடையாது. அதற்கு சீனாவும் ரஷ்யாவும் மறைமுக ஆதரவு கொடுத்துள்ளன. ஆனால் கட்டார் மீதான மேற்காசிய சக்திகளின் நடவடிக்கை அதன் எதிர்காலத் திற்கு ஆபத்தானது. கட்டார்–ஈரான் உறவும் கட்டாரில் காணப்படும் அல்ஜசீரா தொலைக்காட்சியின் நடவடிக்கை யுமே அமெரிக்க சார்பு சக்திகளுக்கு உள்ள பிரச்சினை.

எனவே கட்டார் விவகாரம் நீண்டகால விளைவை ஏற்படுத்தக் கூடியது. அபாயமானது. இது ஒரு போரை உடனடியாக ஏற்படுத்தாது விட்டாலும் எதிர்காலத்தில் ஈராக், லிபியா போன்ற அனுபவத்தை ஏற்படுத்திவிடும். அது மட்டுமன்றி மேற்குலகம் விரும்பும் ஆட்சி முறைக்குள் கட்டார் செல்ல வேண்டும் என்ற கோரிக்கை கட்டாருக்கு மேற்கு இலக்கு வைத்துள்ளதென்பதையே குறிக்கிறது.

அடுத்த தென்சீனக்கடல் பகுதி முழுமையான போர்ப் பதட்டத்திற்கும் பரஸ்பரம் எச்சரிக்கைக்கும் உட்படுத்தப் பட்டு வருகிறது. சீன–அமெரிக்க மோதலுக்கான நேரடிக் களமாக தென்சீனக்கடல் விளங்குகிறது. இதில் சீனாவின் அணுகுமுறை அமெரிக்காவின் அணுகுமுறைக்கு சமமான தாகவே அமைந்துள்ளது. இருதரப்புகளும் ஆக்கிர மிப்பு மனப்பான்மையுடனேயே செயல்பட விளைகின்றன.

இவர்களின் நடவடிக்கைகள் சர்வதேசக்கடல் சட்டத்தை மீறும் நிகழ்வுகளாகவே பதிவு செய்யப்படுகின்றன. இராணுவ–வர்த்தக போக்குவரத்து மையம் என்பதை விட கடல்வளங்களை இலக்கு வைத்து சீனாவின் எழுச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் களமிறங்கியுள்ளன.

அடுத்த சீனா–இந்திய எல்லையும் பாகிஸ்தான்–இந்திய எல்லையும் யுத்த சூழலுக்குள் நகர்கிறதா என்பது பிரதான கேள்வியாகும். இரண்டு எல்லைகளும் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் எல்லைகளாகவே உள்ளன. பாகிஸ்தான்–சீனக் கூட்டு இந்தியாவை ஆபத்துக்குள் நகர்த்தும் விதத்தில் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் எதிர்முனைவுகளை அமெரிக்கா ஊக்குவிக்கும் கரிசனையுடன் செயல்பட விளைகின்றதையும் உணரமுடிகின்றது. பிரதமர் மோடியின் அமெரிக்க இஸ்ரேல் பயணங்களுக்கு எல்லை சார்ந்த மோதலே பின்புலத்திலிருந்தது.

எனவே உலகம் ஒரு யுத்த விளிம்புக்குள் அகப்பட்டுள்ளது. அதனை தீர்மானிப்பதில் பெரும் வல்லரசுகள் கவனம் செலுத்துகின்ற போதும் நேரடியான யுத்தத்தில் ஈடுபட தயக்கம் காட்டுகின்றன. அதனால் சிறிய அரசுகளுடன் யுத்தத்தை நடத்தி விட்டு தமது வீரத்தை உலகத்திற்கு காட்டி வல்லரசாக வலம்வர விளைகின்றன. ஆனால் அதற்கு வலுவான காரணம் அணுவாயுதப் போரே யாகும். உலகிலுள்ள அனைத்துப் பெரும் போர்களும் தவிர்க்கப்படுவதற்கு அணுவாயுதமே காரணமாகும். அணுவாயுத யுத்தம் என்பது அழிவின் முடிவாகவே அமையும் என்பதனால் அடுத்துள்ள மென், வன் அதிகார மோதல்களே நெருக்கடிகளை தணிவிக்கும் கருவிகளாக உலகத்தில் வளர்ந்துள்ளன. அதாவது வன்அதிகாரத்திற்கு எல்லை போட்டு நாடுகளை அதற்குள் செல்ல முடியாது தடுத்து வருகிறது மென் அதிகாரம். இதனால் வன் அதிகாரம் அதிக நெருக்கடியை கொடுத்தால் நாடுகள் மென் அதிகாரத்திடம் சரணடைந்துவிடும் என்ற அச்சமொன்று வன்அதிகார சக்திகளுக்குள் எழுந்துள்ளது.

பாரிய யுத்தங்களைத் தவிர்க்கும் வல்லரசுகளும் அவற்றை முன்னிறுத்தி சிறிய அரசுகளும் செயல்படும் உலகமொன்று இயங்க ஆரம்பித்துள்ளது. ஆனால் சிறிய அரசு ஒன்று முனைப்பு பெறும் பட்சத்தில் பாரிய யுத்தம் ஒன்று ஏற்படலாம். அதற்கான சூழலை உலகம் முதன்மைப்படுத்திவிட்டது.

---

**(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்கள் பிரிவுகளுக்கு வழிவகுக்கும். ஜனநாயக விழுமியங்களை குறைமதிப்பீடு செய்யும். அதிகாரப்பரவலாக்கலின் முழுமையான நன்மைகளை அடைவதற்கும் சமத்துவ பிராந்திய அபிவிருத்திப் பயணத்திற்கான பங்களிப்பைச் செய்வதற்கும் 13ஆம் திருத்தத்தின் கீழான வடிவமைப்பு நிதி ரீதியான ஏற்பாடுகள் அனுமதிக்க வில்லை.

நிதி ஒதுக்கீடு தொடர்பாக இக்குழு பின்வரும் முக்கிய பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

1. மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக்காக நிதி ஆணைக்குழுக்களால் உருவாக்கப்பட வேண்டிய கட்டாய நெறிமுறைகளை அரசியல் யாப்பு கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக அரசாங்கத்தின் வருமான சேகரிப்பில் 40வீதமாவது மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என அரசியல் யாப்பு பரிந்துரைக்க வேண்டும்.

2. மாகாண சபையின் பிரதிநிதித்துவத்துடன் நிதி ஆவணக்குழு மீள் உருவாக்கப்படல் வேண்டும்.

3. மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீடு தேசிய வரவு செலவுத் திட்டத்துடன் சேர்த்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதனால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

4. அரசாங்கத்தின் மூன்று அடுக்குகள் (மத்தி,மாகாணம், உள்ளூராட்சி) தொடர்பிலான வருமானம் சார் அதிகாரங்கள் தெளிவாக அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட வேண்டும். நிதி சேகரித்தல் பொறிமுறை மாகாணங்களின் பங்குகளாக நிகழுகின்ற போது அவை நேரடியாக சம்பந்தப்பட்ட மாகாணத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.

5. தேசிய கொள்கை உருவாக்கத்தின் போது மாகாண பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் கூடிய கலந்தாராய்வு பொறிமுறையை உறுதிப்படுத்தக் கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**13 ஆம் திருத்தச்சட்டமூலத்தில் மத்திய அரசாங்கத்தாலும் மாகாணசபைகளாலும் கலந்தாலோசிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த படவேண்டிய விடயங்களைக் கொண்ட பட்டியல் ஒன்று உள்ளது. இப்பட்டியலுள்ள விடயங்கள் தொடர்பாகவும், சட்டம் ஒழுங்கு, காணி, அரசியல் அரசியலமைப்பு நீதிமன்றம் என்பவை தொடர்பாகவும் இக்குழுவின் அறிக்கையின் அநுபந்தத்தில் உள்ளவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.**

**– ஆசிரியர் –**



# எம்மண்ணின் வளங்களுக்கு கூட்டு வேலைத்திட்டம்

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வறுமை தொடர்பான SAAPE அறிக்கை மற்றும் VGGT தமிழ் கைநூல் வெளியீட்டு நிகழ்வும், பொதுக் கலந்துரையாடலும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான மக்கள் கலந்துரையாடல் இணைப்பாளர் அன்டனி ஜேசுதாசன் தலைமையில் 10.07.2017 திங்கட்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் வி.பி. சிவநாதன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என்.இன்பநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராஜா, சங்கத்தின் செயலாளர், பிரபல அரசியல் சமூக ஆய்வாளர் ம. நிலாந்தன், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி. அ. யோதிலிங்கம், பிரஜா அபிலாஷா வலையமைப்பு இணைப்பாளர் பிரான்சிஸ் ராஜன், பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**பேராசிரியர் சூசை ஆனந்தன் மேலும் தெரிவிக்கையில்,**

இலங்கையிலேயே முதலாவதாக அமைக்கப்பட்ட மீன்பிடித்துறைமுகமாக மயிலிட்டித் துறைமுகம் காணப்படுகின்றது. வடக்குப் பிரதேச கடல் வளத்தின் மையப் புள்ளியாகவும் இது அமைந்துள்ளது. வலிகாமம் வடக்கில் மிக முக்கிய துறைமுகமாகக் காணப்படும் மயிலிட்டித் துறைமுகம் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட நிலையில் தற்போது விடுவிக்கப்பட்டாலும் அந்தப் பகுதி இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

-தொகுப்பு : செல்வநாயகம் ரவிசாந்-

தேசிய மீனவஒத்துழைப்பு இயக்கத்தினர் பல தடவைகள் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டு அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளைப் பல்வேறு மட்டங்களுக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். வலிகாமம் வடக்குப் பிரதேசம் ஐந்தாயிரம் ஹெக்டேயருக்கு மேற்பட்டதொரு பிரதேசம். அங்கு கடல் வளம், நன்னீர் வளம், நில வளம் போன்ற பல்வேறு வளங்கள் காணப்படுகின்றன. அங்கு மயிலிட்டித் துறைமுகம், விமானத்தளம், புகையிரத நிலையம், காசநோய் வைத்தியசாலை போன்ற பல்வேறு வசதிகளும் அமைந்துள்ளன. குட்டி அரசை நடத்துவதற்கான நில வளம், நீர் வளம் போன்ற அனைத்து வளங்களும் வலி. வடக்கில் அமைந்து காணப்படுகின்றன.

அவ்வாறான பரந்த பிரதேசத்தை இராணுவம் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் குட்டி இராணுவ அரசாக வைத்திருக்கும் நோக்கிலேயே வலி. வடக்குப் பிரதேசம் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மக்களுடைய போராட்டங்கள் காரணமாக வலி. வடக்கு நில ஆக்கிரமிப்பு விடயத்தில் சிறியதொரு தளர்வு ஏற்பட்டது. குறிப்பிட்ட ஏக்கர் கணக்கான நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த விடயத்தில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வலி. வடக்குப் பிரதேசம் மீண்டும் முழுமையாக எங்களின் கைக்குள் வர வேண்டும். இவ்வாறான சூழல் ஏற்படும் போது தான் எங்கள் இயற்கை வளம் பாதுகாக்கப்படுவதுடன், எமது மக்களின் நில உரிமையும் உறுதிப் படுத்தப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், நாயாறு போன்ற பிரதேசங்கள் பாரம்பரியமாகத் தமிழ்மக்கள் வாழ்ந்து வந்த வளம் மிக்க பிரதேசங்கள். தெற்கி

லுள்ள சிங்கள அரசியல் தலைவர்கள் அரசியல் ரீதியாக அந்தப் பகுதிகளில் தென்னிலங்கை மக்களைக் குடியமர்த்தி முல்லைத்தீவு மக்களுக்கும், தெற்கைச் சேர்ந்த மக்களுக்கு மிடையில் முரண்பாடுகளை உருவாக்கியுள்ளனர். தமிழ்மீனவர்கள் செல்லாத வகையில் இராணுவத்தின் பாதுகாப்புடன் சுற்றிவர வேலி அடைக்கப்பட்ட நிலையில் தென்பகுதி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். நான் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்ற போது குறித்த இடங்களைப் பார்வை யிட்டேன். நூறு வாடிகளுக்கு மேல் காணப்பட்டன. குறித்த பகுதியில் சனநடமாட்டத்தையே காண முடிய வில்லை. இராணுவம் மாத்திரம் தான் அங்கு காணப்பட்டது. அடுத்த சீசனுக்குத் தென்பகுதி மீனவர்கள் வருகை தரும் வரை இதுதான் நிலைமை.

தற்போது மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் மாறியுள்ளது. இராணுவத்திற்கு அச்சப்பட்டு மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், எமது மக்கள் வறுமையின் பிடியில் தொடர்ந்தும் சிக்கித் தவிர்க்க வேண்டிய அவல நிலைமையேற் பட்டுள்ளது. தமிழ் மீனவர்கள் அதிகம் வாழும் முல்லைத் தீவுப் பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டும்.

முள்ளிக்குளம் மன்னார் மாவட்டத்தில் தென் மேற்காக அமைந்திருக்கும் ஒரு கத்தோலிக்க தமிழ்க் கிராமம். அங்கு 350 குடும்பங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர். கடல் வளம், விவசாய வளம், காட்டு வளம் மிக்கதொரு பிரதேசமாக முள்ளிக்குளம் அமைந்துள்ளது. அந்தப் பிரதேசத்து மக்களைத் தற்காலிக மாக வெளியேறுமாறே இராணுவம் கூறியது. இராணு வத்தினரின் வார்த்தைகளை நம்பி வெளியியேறிய அந்தப் பகுதி மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை.

அண்மையில் முள்ளிக்குளம் கிராம மக்கள் மீள்குடியேற்ற அனுமதிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி கள் வெளியாகியிருந்தன. ஆனால், பாடசாலை மற்றும் ஆலய வளாகங்களில் தான் அந்தப் பகுதி மக்கள் தங்கி யுள்ளனர். தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் முள்ளிக்குளம் பகுதியையே இராணுவத்தின் வடமேற்குக் கட்டளைத் தலைமைச் செயலகமாக மாற்றியிருக்கிறார்கள். இது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம். தெற்கிலுள்ள கடற்கரையோரப் பிரதேசங்களில் இவ் வாறான இராணுவ முகாம்களை அமைப்பதை விடுத்து வடக்கு மாகாணத்தில் மக்களின் குடியிருப்புக்களுக்கு மத்தியில் இராணுவத்தினர் முகாம் அமைத்து ஏன் குடியிருக்கிறார்கள் என்பது புரியவில்லை.

மன்னாரில் தலைமன்னார், சிலாவத்துறை போன்ற இடங்களிலும் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். தென்பகுதி மீனவர்கள் குறிப் பிட்ட சீசனுக்கு வந்து மீன்பிடியில் ஈடுபட்டுச் சென்ற பின்னர் அவர்கள் பயன்படுத்திய வாடிகள் அப்படியே காணப்படும். அதற்கு இராணுவத்தினர் காவல் காக்கின்றனர். யாரையும் குறித்த இடத்திற்குச் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்க மாட்டார்கள்.

தற்போது வடக்கு மாகாணத்தின் பல்வேறிடங் களிலும் காணப்படும் காட்டு வளங்கள் சூறையாடப்பட்டுத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மன்னார் மாவட்டத்திலிருந்து அதிகளவு காட்டு மரங்கள் கடத் தப்படுகின்றன. மன்னார் நீதிமன்ற வளாகத்திலும், அருகி லும் வேறு மாவட்டங்களுக்குக் கடத்திச் செல்லப்பட விருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி மன்னாரிலுள்ள அருவி ஆறு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்து பெருமளவு மணல் அகழ்வு செய்யப்பட்டுத் தென்பகுதிக் குக் கொண்டு செல்லப்படுகின்றது. தற்போது வடக்கில் மணலுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற சூழலில் மணல் கடத் தலைத் தடுக்க உரிய அதிகாரிகள் தவறி விட்டனர்.

கற்பிட்டி, நீர்கொழும்பு, புத்தளம் ஏரிகள் போன்ற பிரதேசங்களில் நிலங்களை, ஏரிகளை, கண்டல் தாவரங் களைப் பல்தேசியக் கம்பனிகள் மூலமாக அரசாங்கம் அபகரிக்க முற்பட்ட போது அங்குள்ள மக்கள் அதனை எதிர்த்து வெற்றி கொண்டார்கள். குறிப்பாக நீர் கொழும் புப் பிரதேசத்தின் ஏரியை விமான இறங்குதுறையாக மாற்றுவதற்காக அரசாங்கம் முனைப்புக் காட்டியது. 3500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு ஜீவனோபாயத் தொழிலாகக் கட்டுவலைத் தொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத் தொழிலில் இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை உணர்ந்து பல்வேறு மத நிறு வனங்கள், பெண்கள் அமைப்புக்கள், மீனவ சமூகம் போன்ற பல்வேறு தரப்புக்களை அணிதிரட்டி அதனை அவர்கள் தோற்கடித்திருந்தார்கள்.

புத்தளம் ஏரிப் பிரதேசத்தை உல்லாசப்பயணத் துறைக்காக அபிவிருத்தி செய்வதற்காக கண்டல் காடு கள், ஏரிப் பிரதேசங்கள் போன்றவற்றை ஆக்கிர மித்து அதனுள் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. அப்போதும் பல்வேறு அமைப்புக்கள் ஒன்று திரண்டு கிளர்ந்தெழுந்து பாரிய போராட்டங்கள் நடாத்தி அந்தப் பிரதேச வளத்தைக் காப்பாற்றினார் கள். அதேபோன்று எங்களுடைய மண்ணின் வளங்கள் பல்தேசியக் கம்பனிகளாலும், தென்பகுதி மக்களாலும் அபகரித்துச் செல்லப்படாமலிருப்பதற்கு ஒன்றி ணைந்த கூட்டு வேலைத்திட்டம் அவசியம் என்றார்.

# ஈழத்தின் வேளாண் மன்னர்





துருவன்

“சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் ஆதலால் உழந்தும் உழவே தலை” என்கிற வள்ளுவப் பெருந் தகையின் வாக்குக்கு இணங்க பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே எவ் வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது என்று தெளிவாக விளக்குகிறது அந்தக் குறள்.

இதனை எத்தனை பேர் விளங்கிக் கொண் டுள்ளோம்? தமிழ்நாட்டின் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரைக் கொண்டாடும் நாம் எமது தாயகப் பிரதேசத்தில் வாழ்ந்து விவசாயத் துறையில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிவிட்டு சாதாரணமாக இருக்கும் ஒருவரை பெரிதாக கண்டுகொள்ளாமல் இருக்கின்றோம். எமது பிரதேசத்தில் வாழ்நாள் விவசாயிகள் பலர் இருந் தார்கள். அவர்கள் யாரையும் நாம் கண்டு கொள்ளாததன் விளைவு, தற்போது முழுநேர விவசாயிகள் பலரும் இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய நிலையில் இயற்கை விவசாயம் என்பதே அருகிக் கொண்டு செல்லும் நிலையில், அதீத செயற்கை உரப்பாவனையால் மண்ணின் வளம் குன்றிக் கொண்டு போகிறது. இந்நிலையில் விவசாயத்தில் சாதித்த மூத்த விவசாயியைப் பற்றி நினைப்பது பொருத்த மானது. வன்னிப் பிரதேசத்தில் இருந்து வெளிவந்த அறிவுக் கதிர் என்கிற இதழில் இவரைப் பற்றிய தகவல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் 1948 இல் பிறந்த கந்தையா முத்துக்குமார் விவசாயம் செய்து அதன்மூலம் பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். 1964 இல் படித்துக் கொண்டிருக்கும் போதே தகப்பனார் கந்தையாவுடன் இணைந்து உழவுத்தொழிலில் ஈடுபட்ட முத்துக்குமார், பின்னர் 1968 – 1969 காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கையை சிறப்பாக செய்து ஏக்கருக்கு 177 புசல் நெல்லை அறுவடையாகப் பெற்ற தற்காக வவுனியா அரச அதிபர் பி.சி பெரேரோவிட மிருந்து முதலாம் பரிசையும் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் 1974 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற பொருட்காட்சியில் தரமான தேசிக்காய் உற்பத்திக்காக 3 ஆம் பரிசினையும், 1993 – 1994 காலப் பகுதியில் ஏக்கருக்கு 160 புசல் நெல்லை உற்பத்தி செய்த மைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் இருந்து வேளாண் மன்னர் என்கிற சிறப்பு பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். 1995 இல் உலக உணவு நிறுவனத்தின் சர்வதேச மட்ட நெல் உற்பத்திக் கான முதன்மைப் பரிசு, 1997 இல் வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் சிறந்த விவசாயிக்கான பரிசு, 2001 இல் வவுனியா விவசாயத் திணைக்களத்தினால் சிறந்த வீட்டுத் தோட்டத்துக்கான பரிசு என்பவற்றையும் இவர் பெற்றுள்ளார்.

1995 ஆம் ஆண்டு உலக உணவு நிறுவனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையும், உலக உணவு தினத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவையும் நினைவு கூரும் முகமாக பரிசில் வழங்கும் நிகழ்வு தாய்லாந்தில் இடம்பெற்றது. இலங்கை அரசும் இதனைக் குறிக்கும் முகமாக 2 ரூபாய் நாணயக் குற்றியை வெளியிட்டது. இதன்போது தாய் லாந்து மகாராணியிடம் இருந்து முதன்மைப் பரிசினை முத்துக்குமார் பெற்றுக் கொண்டார்.

விவசாய பொருளாதாரத்தையே முதன்மையாக கொண்ட எமது சமூகம் இன்று என்ன நிலையில் உள்ளது என்பதற்கு விவசாயத்தின் இன்றைய நிலையே உண்மையான சாட்சி. பசிக்கு சோறு போடும் விவசாயிக்கு நாங்கள் உரிய மதிப்புக் கொடுக்கின்றோமா என்கிற கேள்வியை நாங்கள் எமக்குள்ளேயே நியாயமாக எழுப்ப வேண்டும்.

**முத்துக்குமார் ஐயாவுடன் பேசும் போது அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,** இயற்கையில் காணப்படும் மண், நீரை மூலதனமாகக் கொண்டு இவற்றை உச்ச பயன்பாட்டில் பயன்படுத்தி விவசாயத்தில் இடைவிடாது ஈடுபட்டேன். தூறல் நீர்ப்பாசனம் போன்ற நவீன தொழிநுட்பங்களை விவசாயத்தில் பயன்படுத்துவதனூடாக நீரை வினைத்திறனுடன் பயன்படுத்தவும் சேமிக்கவும் முடியும். கால்நடைகளை வளர்ப்பதனூடாக கிடைக்கின்ற சாணம், இலை தளைகளை பசளையாக பயன்படுத்துவதனூடாக மண் வளத்தை சரியான சமநிலையில் பேணவும், உயர்த்தவும் முடியும். என்னிடம் முன்னர் நூறுக்கும் மேற்பட்ட மாடுகள் இருந்தன. போரால் அவை ஏராளமாக அழிந்து தற்போது சிலவே உள்ளன. தற்போது நெற்பயிர் பயிரிடுவதுடன் சேர்த்து மிளகாய், கச்சான், சோளம், பஷன் புரூட் போன்றவற்றையும் பயிரிட்டு வருகிறேன். இப்போது கூட்டிணைந்த பண்ணை தொடர்பில் அக்கறை செலுத்தி வருகிறேன்.

இன்று பிளாஸ்டிக் அரிசி சந்தைக்கு வருவதாக கூறி பயமுறுத்துகிறார்கள். இவை எல்லாம் உடல் நலத்துக்கு எவ்வளவு கேடு என்பதனை மக்கள் உணர வேண்டும். எல்லாரும் விவசாயத்தை நோக்கி நகர வேண்டிய காலகட்டம் இது.

**முதலில் விவசாயத்தில் பற்று இருக்க வேண்டும். அடுத்து நம்பிக்கை இருக்க வேண்டும். நட்ட இலாபத்தை பார்க்கக் கூடாது. நாங்களே உற்பத்தி செய்து சாப்பிடுவோம் என்கிற நோக்கத்தைப் பார்க்க வேண்டும். விவசாயத்தில் நவீன தொழிநுட்பத்தை புகுத்த வேண்டும். பாரம்பரிய நெல் இனங்கள் எமக்கு மிகவும் உகந்தவை. நஞ்சில்லா உணவை நாங்களும் சாப்பிட வேண்டும், மற்றவர்களும் சாப்பிட வேண்டும் என்கிற நல்ல நோக்கம் முதலில் இருக்க வேண்டும். அதன் மூலம் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த நஞ்சில்லா உணவை நாங்கள் உட்கொள்கின்றோம் என்கிற நிலை உருவாகும். அதன் மூலம் நல்ல ஆத்ம திருப்தி கிடைக்கும்.**

இங்கே விவசாய திணைக்களத்தினர் முன்வந்து விவசாயிகளுக்கு உதவும் நிலை உள்ளது. அதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் விவசாயத்தில் நவீன தொழிநுட்பங்களின் பயன்பாடு அவசியமானது. விவசாய விளைபொருளை மதிப்புக்கூட்டி விற்கின்ற தொழிற்பாடு இருக்க வேண்டும். அதற்கான உதவிகளை வடக்கு விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம் செய்து கொடுக்க வேண்டும். என்றார்.

# கிழக்கு மாகாணத் தமிழர்களை முட்டாளாக்குகின்றதா கூட்டமைப்பு?

பத்தி

“புதிய அரசியல் அமைப்பில் தமிழருக்கான தீர்வு விடயம் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஏகமனதாக கட்சிகளால் ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் வடகிழக்கு இணைப்பு கிழக்கு மாகாண முஸ்லீம் அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக வடகிழக்கு இணைப்பு தற்போதைக்கு சாத்தியம் இல்லை. காலம் கடந்த பின்னரே சாத்தியமாகலாம்”. இது தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்களால் அண்மையில் தெரிவிக்கப்பட்டவை.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்பதில் முஸ்லீம் அரசியல் தலைமைகள் மிகவும் தூரநோக்குடனான திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகின்றனர். முன்னர் அம்பாறையில் கரையோர மாவட்டத்தைக் கேட்டார்கள். இன்று கிழக்கு மாகாணத்தை முழுவதுமாக கேட்பதோடு அதற்கான பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தமிழர் வசமான காணிகளை கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் பலத்தினாலும் பணபலத்தினாலும் பெற்றுக்கொள்வதுடன் மத மாற்ற விடயத்திலும் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

இவை அனைத்தும் தெட்டத் தெளிவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகளுக்கு தெரிந்திருந்தும் அவர்கள் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் மௌனமாய் இருந்து கிழக்கு மாகாணத்தமிழர்களை முட்டாளாக்குகின்றனர். இதுவரை வடகிழக்கு இணைப்பு என்ற ஒரு கொள்கையை வைத்து முஸ்லீம்களை அனுசரித்து அரசியல் செய்தார்கள். இனி எதை வைத்து அரசியல் செய்யப் போகின்றார்கள்? கிழக்கு மாகாண சபையில் இரண்டு அமைச்சர்களைப் பெயர் அளவில் வைத்திருப்பவர்களால் என்ன செய்ய முடிந்தது? கிழக்கு மாகாண தமிழர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வருகின்றனர். இதற்கு காரணம் தற்போதுள்ள தமிழ்த் தலைமைகளே!

30வருடங்களுக்கு முன்னர் இருந்து இயங்கிவரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை நிரந்தரமாக்குவதற்கும், கல்முனை மத்தி கல்வி வலயத்தினை உருவாக்குவதற்கும் தடையாக இருக்கும் முஸ்லீம் அரசியல்வாதிகளுடன் வடகிழக்கு இணைப்பு ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக விட்டுக்கொடுப்புடன் அரசியல் செய்வதாக இதுவரை கூறிக்கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடகிழக்கு இணைப்பு இல்லையென்றான நிலையில் இனி கிழக்குத் தமிழர்களிடம் என்ன சொல்லப்போகிறார்கள்?

–ஜாராவி.



# மலையக பெருந்தோட்ட பெண்களும் சமூகத்தில் எதிர்நோக்கும் சவால்களும்

சிமியோன் புளோரிடா - யாழ்.பல்கலைக்கழகம்

சமுதாய எழுச்சியில் பெண்கள் வகிக்கும் பங்கு அளப் பரியது. பெண்களை புறந்தள்ளிய எந்தவொரு சமூகமும் தேசிய முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டதாக சரித்திரமே இல்லை. இதனை உலக வரலாறுகள் நிரூபித் துள்ளன. எனினும் தந்தைவழி சமூக அமைப்பு என்று கூறப்படும் கருத்தியலின் அடிப்படையில் ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில் பெண்களின் கருத் துக்களை சமூகம் எந்தளவுக்கு உள்வாங்கியுள்ளது என்பதும் சமூக மட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தள வுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக் குறியானதாகவே உள்ளது.

குறிப்பாக இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51 சதவீதமானவர்கள் பெண்களாவர். இவர்களில் 83 சத வீதமானவர்கள் எழுத்தறிவு பெற்றவர்கள். பெண்களின் மொத்த சனத்தொகையில் 49 சதவீதமானவர்கள் பல் கலைக்கழக கல்வி அல்லது உயர்கல்வி அந்தஸ்தினை உடையவர்கள். பெருந்தோட்டங்களில் தற்போது தொழில் செய்கின்ற தொழிலாளர்களின் 54 சதவீதமானவர்கள் பெண்கள். மலையக பெண்களில் 8 சதவீதமானவர்கள் வீட்டு பணிப்பெண்களாகவும், ஆடைத் தொழிற்சாலை களிலும் பல்தொகுதி அங்காடிகளில் சேவையாளர் களாகவும் பணியில் ஈடுபடுகின்றனர்.

200 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியா விலிருந்து பெருந்தோட்டத்துறை தொழில் முயற்சிகளுக் காக அழைத்து வரப்பட்ட பெண் தொழிலாளர்கள் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் அரசியல் சமூக, பொருளாதார மட்டத்தில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையிலேயே உள்ளனர். அண்மைக்கால அபிவிருத்தி அடைவுகளில் இருந்தும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளனர். 21 ஆம் நூற்றாண்டின் பெண்ணுரிமை தொடர்பான பெரும்பாலான நியதிகளில் இருந்து மலையகப் பெண்கள் புறந்தள்ளப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் பெருந்தோட்டத்துறை உற்பத்தியான தேயிலையினை பெற்றுத் தரும் தொழிலாளர்களுள் 65 சதவீதமானவர்கள் மலையகப் பெண்களே. ஆனால் மாறிவரும் உலகில் இவ்வருமானத்துறை வீழ்ச்சியடைந் தாலும் பெருந்தோட்டத்துறை பொருளாதாரம் இன்று வரை நிலைத்திருப்பதன் காரணகர்த்தாக்களாக மலையக பெண்களே உள்ளனர். ஆரம்பக் காலங்களைவிட சமகால சூழ்நிலை ஓரளவு மாற்றமடைந்து இவர்களது வாழ்க்கை யில் முன்னேற்றகரமான ஒரு போக்கு காணப்படு கின்ற போதிலும் ஏனைய சமூக பெண்களின் அடிப்படை வேகத்துடன் ஒப்பிடும் போது இவர்களது இந்த முன்னேற்றப் பாதை திருப்திகரமானதாக இல்லையென்பதை மறுக்க முடியாது.

உலக அரங்கில் எந்தவொரு நாட்டிலும் ஆண்களுடன் ஒப்பிடும் அளவுக்கு பெண்கள் சமத்துவ நிலையினை அடைந்ததாக சான்றுகள் இல்லை. வளர்ந்துவரும் நாடு களில் ஆண்களைவிட ஏறத்தாழ இரு மடங்கு அதிகமாக பெண்கள் குறைந்த வேதனத்தை பெறுகின்ற தொழில் களிலே ஈடுபடுகின்றனர். அதேவேளை குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றில் பெண்கள் இயலாமை காரணமாக பாதிக்கப்படுகின்றனர். எனவே நலிந்து உரிமை இழந்து வாழ்கின்ற மலையக தமிழ் பெண் களை பொறுத்தவரையில் உலகமயமாக்குதலின் பாதிப் பில் உருவாகியுள்ள பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆணாதிக்க கருத்தியல் சூழலோடு வளர்க்கப்பட்ட பெருந்தோட்டத்துறை சமூகம் பெண்களை தொழில் செய்யும் ஒரு இயந்திர பொருளாக கருதுகின்றது. ஒடுக்கு முறைகளில் இருந்து விடுபட முடியாமல் இவர்கள் தனி மைப்படுத்தப்பட்டு உள்ளனர். அதேவேளை அதிகமான குடிபோதைக்கு அடிமையான ஆண்களைக் கொண்ட குடும்பங்களில் குடும்ப வன்முறை காரணமாக பாதிக்கப் படுகின்றனர்.

பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் வருமானம் திரட்டும் உழைப்பாளிகளாக இருக்கும் அதேவேளை

குடும்பச்சுமைகளை சுமக்கும் சுமைதாங்கிகளாகவும் உள்ளனர். வருமான உழைப்பாளர் மற்றும் குடும்ப பராமரிப்பாளர்கள் என்ற ரீதியில் இவர்கள் இரட்டைச் சுமைகளைக் கொண்டுள்ளனர். இவை பெண் தொழிலாளர்களின் நாளாந்த கடமைகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இதனால் தொழில் ரீதியாகவும் குடும்பப் பொறுப்புக்கள் என்ற ரீதியிலும் ஓய்வுநேரம் என்பதை இவர்கள் உணர்வதே இல்லை. ஆனால் அவர்களின் உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் அல்லது உழைப்பின் பெறுமதி எந்தளவிற்கு மதிப்பிடப்படுகின்றதென்பதும் கேள்விக்குறியே.

தொடர்ந்து மலையக பெண்களின் கல்வி நிலைமைகளை எடுத்து நோக்கினால் கல்வியறிவு வீதம், பாடசாலை அனுமதி, உயர் கல்வி என்பவற்றில் பெருந்தோட்ட பெண்கள் குறைவான அடைவுகளையே கொண்டுள்ளனர். தேசிய மட்டத்தில் பெண்களின் கல்வி அறிவு உயர்வாக காணப்படும் நிலையிலும் பெருந்தோட்ட பெண்களில் 53 சதவீதத்தினர் ஆரம்ப நிலைக் கல்வியையும் 24 சதவீதத்தினர் இரண்டாம் நிலைக் கல்வியையும் 40 சதவீதத்தினர் சாதாரண கல்வியையும் பெற்றுள்ளனர். இப்புள்ளி விபரங்கள் பெருந்தோட்ட பெண்களின் கல்வி நிலைமைகள் மிகவும் கீழ்மட்டத்தில் காணப்படுவதை எடுத்துக் காட்டுகின்றன.

உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் தோட்டங்களுக்கு வெளியிலேயே காணப்படுவதனால் பெண் பிள்ளைகளைத் தூர இடங்களுக்கு அனுப்பி கல்வி வழங்குவதில் பெற்றோர் நாட்டம் கொள்வதில்லை. போக்குவரத்து வசதிகள் இல்லாமையும் பெண்களின் கல்வி மேலும் வளரத் தடையாக உள்ளது. அதுமட்டுமல்லாது வருமானக் குறைவு, கலாசாரக் கட்டுப்பாடுகள் என்பன பெண்கள் வெளியில் சென்று கல்வியை பெற்றுக்கொள்வதற்கு தடையான காரணிகளாக காணப்படுகின்றன. தற்போது பெருந்தோட்ட பகுதிகளில் பெண்களின் கல்வி நிலை முன்னைய நிலையில் இருந்து முன்னேற்றத்தை அடைந்துள்ள போதிலும் இன்னும் முழுமையாக சாதாரண தடைகளைக் கூடத் தாண்டவில்லை என்ற உண்மையை எவரும் இலகுவாக மறுக்க முடியாது. பழமைவாத கலாச்சார பண்பாடுகளில் மூழ்கி அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெண் பிள்ளைகளின் முன்னேற்றத்தை தாமதப்படுத்துவதென்பது பெண்பிள்ளைகளுக்குசெய்யப்படும்ஒருபாரிய சமூக அநீதியாகும்.

தொடர்ந்து மலையகப் பெண்களின் சுகாதார நிலை குறித்து பார்க்கையில் 290 இலட்சம் உலக ஏழைகளில் அதிக வீதத்தினர் பெண்கள். சுமார் 75 கோடி வறியவர்கள் கொண்ட தெற்காசியாவில் ஏறத்தாழ பாதிப்பேர் பெண்களே. கர்ப்பத்தினாலும், மகப்பேற்றினாலும் ஏற்படும் வியாதிகளில் நாளொன்றுக்கு இறக்கின்ற 1600 பெண்களில் 99 சதவீதமானோர் வளர்முக நாடுகளை சேர்ந்தவர்கள். ஒவ்வொரு வருடமும் 70,000 பெண்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் இறக்கின்றார்கள். 51 சதவீதமான கர்ப்பவதிகள் இரும்புச்சத்து போஷாக்கின்மை காரணமாக இரத்த சோகையால் பாதிக்கப்படுகின்றனர்.

உலகரீதியில் இத்தகைய பெண்களின் நிலையினை மலையகப் பகுதிகளோடு தொடர்புபடுத்தி பார்க்கையில் ஆறடி அகலத்தையும் பத்து அடி நீளத்தையும் வெளிச்சம் புகமுடியாத லயக் காம்பிராக்களிலேயே 98 சதவீதமான தோட்ட தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஐந்து முதல் பத்து குடும்ப உறுப்பினர்கள் அக்குறுகிய நிரல் அறைகளில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழல் நாகரீக வளர்ச்சி கண்டுவரும் தற்கால வாழ்க்கை சூழலுக்கு இடையூறாகவும் பெண்களின் தனித்துவத்திற்கு பாதகமாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களின் கடின உழைப்பான தொழில் இயல்பு காரணமாக அவர்களின் மத்தியில் பல்வேறு ஆரோக்கிய கேடுகள் ஏற்படுகின்றன. கர்ப்பிணிப் பெண்களின் குழந்தைகள் இறந்து பிறப்பதும், சிறுபிராயத்திலேயே குழந்தைகள் இறந்து விடுவதும் அவர்களது தொழில் சூழல் காரணமாக நேரிடும் அவலங்களே. அதிலும் மழைக்காலங்களில் அட்டைப்பூச்சி, விஷஜந்துக்களிற்கு மத்தியில் றப்பர் பொலித்தீன்களை தலைகளில் அணிந்து கொண்டு பணிபுரிவது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும். இவர்களுக்கான முதலுதவி வசதிகளும் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது. இது மலையக பெண்களின் சுகாதார நிலை குறித்த நிலைமைகளாகும்.

தொடர்ந்து வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களின் நிலைமைகளை நோக்குகையில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்று எமது நாட்டுக்கு மிகப் பெரும் அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் இலங்கைத் தொழிலாளர்களின் வாழ்வியலை எவரும் மறைத்து கூற முடியாது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களின் முதலீடு பல அபிவிருத்தி பணிகளுக்கும் பெரிதும் பயன்மிக்கதொன்றாகும்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை என்ற ஒப்பந்தம் மூலம் எப்படி ஏமாற்றப்படுகின்றார்களோ அதே போன்று இலங்கையில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்று செல்லும் இலங்கை தொழிலாளர்களும் மிகப் பெரும் மோசடி நிலைக்குள் தள்ளி வீழ்த்தப்படுகின்றார்கள். அதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களே பிரதான காரணிகளாகவும் விளங்குகின்றனர்.

குடும்ப வறுமை நிலை காரணமாக வாழ்வின் துயர் நிலைக்கு தள்ளப்பட்டு மிகப் பெரும் கனவுகளுடன் விமானம் ஏறச் செல்லும் எமது நாட்டுப் பெண் தொழிலா ளர்கள்அனுபவிக்கும்துயரங்கள்சொல்லில்அடங்காதவை. இது வெளியில் கொண்டுவரப்படாத உண்மையாகும். பல பெண்கள் உயிரற்ற நிலையில் சடலமாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான பெண்கள் உடல்ரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் தாயகம் திரும் பியுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்று சென்றுள்ளவர்களுக்காக பல்வேறு திட்டங்களை அறி முகப்படுத்தி நடைமுறைப்படுத்தும் அரசாங்கம் முகவரியற்ற முகவர்களால் எமது நாட்டு பெண்களை அடிமை தொழிலிற்கு உட்படுத்தப்படும் விபரீதத்தையும் இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் மலையகத் தொழிற்சங்கங்கள் வாக்குகளுக் காகவும் மாதாந்த சந்தா பணத்திற்காகவும் மாதர் சங்கங்களை வைத்திருக்கின்றன. உழைக்கும் பெண் களுக்கு சமமான அரசியல் பிரதிநிதித்துவத்தினை வழங்குவதற்குரிய மனப்பாங்கற்றவர்களாக அவை காணப்படுகின்றன. மலையகத் தொழிற்சங்கங்களுக்கு அதிக விசுவாசமானவர்களும் பெண்களே. தொழிற் சங்கங்களுக்கு கிடைக்கும் சந்தா பணத்தில் கிட்டத்தட்ட 78 வீதம் பெண்கள் வழங்கும் சந்தாவாகவே உள்ளது. இந்த நிலையில் பல தொழிற்சங்கங்களில் இருக்கும் ஓரி ரண்டு பெண் பிரதிநிதிகளும் படு பிற்போக்கான அடிமைச் சிந்தனை கொண்டவர்களாகவும் உழைக்கும் பெண்களை ஆணாதிக்கத்தின் கோரப்பற்களுக்கு இரையாக்கும் கைங்கரியத்தினை செவ்வனே செய்து வருபவர்களாக வுமே பெரும்பாலும் காணப்படுவது கவலைக்கரிய விடயமாகும்.

மலையக தொழிற்சங்கங்களின் சில முக்கிய பிரமு கர்கள் சிறுமிகளை தலைநகர பணக்காரர்களின் வீடுகளில் வேலைக்கு சேர்க்கும் கீழ்த்தரமான செயலையும் செய்து வருகின்றனர். மலையக பெண்களின் போராட்டக் குணாம்சம் மலையக ஆண்களைவிட மிக உயர்ந்த தாகவே காணப்படுகின்றது. இதற்கு சிறந்த உதாரண மாக இலத்திரனியல் ஊடகங்களில் கருத்துக்கூறும் பெண்கள் சரியானதையும் உண்மையையும் எது வித அழுத்தங்களுக்கும் பயப்படாமல் தாங்களாகவே முன் வந்து கூறுவதனைக் காணலாம். தங்கள் குறைபாடுகளை உலகிற்கு தெரிவிப்பதில் பெண்களே முதலிடம் வகிக் கின்றனர். மலையக பெண்களின் போராட்ட குணம் கலந்த சக்தி ஒன்றிணைக்கப்பட்டு அதனை மக்களின் தேவைக் காக குரல் கொடுக்கவும் சுயமாய் சிந்திக்கவும் போராடவும் தயார்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

உலகில் 40 சதவீதமான பெண்கள் தொழிற்சங்க அங்கத் தவர்கள். ஆனால் 1 வீதமான பெண்களே தொழிற்சங்க

## “ஆறடி அகலத்தையும் பத்து அடி நீளத்தையும் வெளிச்சம் புகமுடியாத லயக் காம்பிராக் களிலேயே 98 சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்”

தலைவர்கள். இலங்கையில் 1929ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆனால் இதுவரை பெண் களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது ஐந்து விழுக்காட் டையும் கடக்கவில்லை. இலங்கையில் இதுவரை காலமும் நடைபெற்ற தேர்தல்களில் ஏறத்தாழ 50 பெண்களே நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ளனர். இன ரீதியாக எடுத்துக் கொண்டால் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற அடிப்படையில் தங்களின் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பெண்கள் அரசியலில் பங்கெடுத் துள்ளனர். ஆனால் மலையக தமிழ் பெண்களின் சார்பாக எந்தப் பெண்ணும் இதுவரை பாராளுமன்றப் பிரதிநிதித் துவம் பெறவில்லை.

எனவே மலையக பெருந்தோட்ட பெண்கள் பெருந் தோட்ட உற்பத்தி துறையிலும் குடும்பத்திற்கான உழைப் பிலும் முழுச்சக்தியை செலவிட நேரிடுவதால் தொழிற் சங்க அரசியல் நடவடிக்கைகளில் தம்மை இணைத்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். பொருளா தாரத்துறையில் சுதந்திரமாக இயங்க முடியாதவர் களாகவும், சொத்துரிமை அற்றவர்களாகவும் இருக் கின்றனர். இத்தகைய சமூகத்தடைகள் உடைத்தெறியப்பட வேண்டும். இல்லையென்றால் முதலாளித்துவ அரசிய லில் மலையக பெண்களுக்கு விடிவு என்பது கிடையாது. எனவே தமக்கென மரபு ரீதியான ஒரு சமுதாயக் கட்டுப் பாட்டினை கொண்டு வாழ்கின்ற இப் பெண்களில் நூற் றுக்கு 20 சதவீதமானவர்களே தமது உரிமை தொடர்பான அக்கறை கொள்பவர்களாக இருக்கின்றனர். இதற்கான காரணம் வறுமை மட்டுமல்லாமல் விழிப்புணர்வான கல்வி அறிவு, வலிமை என்பவற்றை தகுந்த காலத்தில் பெற்றி ருக்காமையுமாகும். அதேவேளை பயம், கட்டுப்பாடு, கலாசாரம், ஆணாதிக்கம், மற்றும் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த தெளிவின்மை போன்றவையு மாகும். எனவே அதற்காக மகளிர் அமைப்புக்களை உருவாக்க வேண்டும். அவற்றின் மூலம் அவர்களது ஆளுமையை விருத்தி செய்து மலையகப் பெண் களாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை உரு வாக்கி அவர்களுக்கு மனரீதியான தைரியத்தை கொடுக்க வேண்டும்.

# விட்ட துறையும்... விடாத குறையும்...

நிமிர்வுகள் – 2

 அப்புக்காத்தரும்...  அன்னமாக்காவும்...



மயிலிட்டி விட்டாச்சாம்... நீங்க போய்ப் பாத்தனிங்களோ..?



ஓமோம்.. அண்டைக்கே போனனான்...



அப்ப இனியென்ன, எல்லாம் சரிதானே...?



என்ன எல்லாம் சரி...?



மயிலிட்டி மீன்பிடித்துறையும் விட்டாச்சு... எல்லாரும் தொழில் செய்து நல்லா இருக்கலாம்...



தொழிலோ... அது வேற கதை.. ஆனாப் பாருங்கோ, எங்கட கடற்கரையில கால்களை நனைக்கேக்க... எனக்குக் கடவுளையே, நேர கண்டமாதிரிக்கிடந்தது... கை கூப்பித் தொழுது, கரையில விழுந்து கும்பிட்டனான்.. கண்டியளே..



மெய்யாலுமாவோ...?



உண்மையாய்த் தான்.. ஒரு பத்துப் பதினைஞ்சு நிமிசமாய்...கண்ணில இருந்து தண்ணி பைப்பைத் திறந்துவிட்டமாதிரி வழிஞ்சு கொண்டே இருந்தது...



இருபத்தியெட்டு வருசத்திற்குப் பிறகெண்டா... சும்மாவே என்ன..? அது சரி...ஏன் தொழிலுகளுக்குப் போகேலாதோ...?



துறையை விட்டாச்சுத் தான்... காணிகளையுமெல்லோ முழுசா விட வேணும்.... பிறகு சனமெல்லாம் மெல்ல மெல்லத் திரும்பி வந்து குடியேறோணும்.. கட்டாந்தரையில இருந்து, ஒண்டொண்டாய் கட்டி யெழுப்பிறதெண்டால்.. சும்மாவே..கால நேரமும் வேணும்.. தூக்கிவிடக் கைகளும் வேணும் தான்..



ஓமோம்.. அதெண்டாச் சரிதான்... நானும் ஒருக்கா வாற கிழமை அப்பிடிப் போய்ப் பாக்கத்தான் வேணும்...



கட்டாயம் ஒருக்காப் போய் பார்த்திட்டுவாங்கோ அடுத்த கிழமை சந்திப்பம்.

நெம்பு

## பல உயிரிகளின் ஏக்கம் இது

விட்டாச்சு நிலம்...
விடிந்தாச்சு வாழ்க்கை... – என்று
விடிகாலை வந்தாச்சு...
போட்டிருந்த முள்வேலிக்குள்,
தலையை விட்டுப் பார்க்கையிலே..
வீடு இருந்தது போல்...
ஒரு தடமும் காணவில்லை...
மூடிய புல் தரையில்,
அத்திவார அடையாளங்கள்...
குத்திட்ட கண்களுக்குக்
கொஞ்சமாய்த் தெரிந்தது...
தலைமுறைகள் வாழ்ந்த வீட்டை,
தரையோடு மண்ணாக்கி...
முளைத்த புல் தரையில்...
உதைபந்து விளையாட்டு...
சும்மாயிருக்கும் படை....
சுறுசுறுப்பாய் விளையாட...
மைதானம் வேண்டுமென்று,
மண்ணாக்கிப் போயினரோ...
மக்கள் வாழ்வுதனை..
காணாமல் ஆக்கப்பட்ட....
வாழ்வு இழந்த... வாழ்விடங்கள்...
குப்பை சுமக்கும் பெரும் கிணறுகளின்...
நீர் இழந்த தவிப்பும்...
நினைவுகளின் வழித்தடங்கள்,
தொலைத்த நெஞ்சங்களின் தவிப்பும்..
மீண்டு வரவில்லை இன்னும்...
எந்தையுந் தாயும், முந்தையரும்...
மகிழ்ந்து குலாவிய இடம்...
பாசங்களின் வாசங்களால்...
பரிசுத்தமான இடம்...
இறப்பதற்குள்... ஒருமுறையேனும்...
எம் மண் தொட்டுத் திலகமிடுவதற்காய்...
தம் உயிரை நீட்டிப்பிடித்துக் – காத்திருக்கும்
பல உயிரிகளின் ஏக்கம் இது...



# தரமான கல்வி அபிவிருத்தியை நோக்கிய பயணம்...!

- வல்வை ந.அனந்தராஜ் -

கடந்த நிமிர்வு இதழ்களில் வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தியின் தேக்க நிலை தொடர்பாக எங்கள் ஒவ்வொருவரினதும் இதயத்தைப் பாதிக்கும் வலிகளைப் பார்த்தோம். இவ்வாறான வலிகளை நீக்குவதற்கான முன்னோடிச் செயல் திட்டம் ஒன்றைத் தற்போது புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் வடமாகாணசபை கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் ஏற்றிருப்பதை அவரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் புலப்படுத்துகின்றன. அவற்றுள்,

1. **பாடசாலைகளுக்கான கள விஜயம்**
2. **வலய ரீதியாக அதிபர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்**
3. **பாடசாலை மாணவர்களுடனான கருத்துப் பரிமாற்றங்கள்**
4. **பெற்றோர்களின் கருத்தை அறிதல்**
5. **கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களுடனான சந்திப்பும் பின்னூட்டலும்**

என்ற அடிப்படையில் மன்னார், கிளிநொச்சி வலயங்களின் பின்தங்கிய பிரதேச மாணவர்களினதும், ஆசிரியர்கள், அதிபர்களினதும் கருத்துக்களைக் கேட்ட பின்னர் தான் வடமாகாணம் தற்போது எங்கே எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அறிய முடிந்ததாகக் கல்வி அமைச்சர் கவலையுடன் தெரிவித்தார்.

அந்த வகையில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட சில பிரதேசங்களுக்கான கள ஆய்வைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட கல்வி அமைச்சர் பின்வரும் விடயங்களை அவதானித்துள்ளார். எனவே கல்வித் துறை சார்ந்த ஒரு விரிவுரையாளராகவும், கலாநிதியாகவும் அவர் இருப்பதால் மிக அவசரமாகப் பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்பதை அமைச்சருக்கு அறியத் தருவது எங்கள் ஒவ்வொருவரினதும், தார்மீகக் கடமையாகும்.

1. பின்தங்கியுள்ள பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குதல் அல்லது சமநிலைப்படுத்துதல். இதில் முக்கியமான விடயம் சில பாடசாலைகளில் தேவையான ஆளணியிலும் பார்க்க கூடிய அளவில் ஆசிரியர்கள் தேங்கிக் காணப்படுதல். ஏ–9 வீதியில் தெருவோரமாக உள்ள பாடசாலைகளில் அதிகளவிலான ஆசிரியர்கள் காணப்படும் வேளையில் கிராமப்புறங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.
2. யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்ற ஆசிரியர்கள் காலையில் தமது வீடுகளில் இருந்து பேருந்துகளில் புறப்பட்டு பிற்பகல் பாடசாலை முடிவடைந்ததும், முடியாததுமாக அடுத்த பேருந்து வண்டியில் தமது வீடுகளுக்குத் திரும்புவதால் அவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைவதுடன் மட்டுமல்லாது, ஆசிரியர்களும் களைப்படைந்து விடுகின்றனர். இந்த நிலையில் வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் என்பது இடம்பெறாது. அதேவேளை பாடசாலைகளின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் முற்றாகவே முடக்கப்பட்டு விடுகின்றன. இதற்கான தீர்வாக பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்பட்டோ அல்லது இருக்கின்ற விடுதிகளைப் பயன்படுத்துவதற்கேற்ற ஒழுங்குகளோ மேற்கொள்ளப்படவேண்டும். அதனை விட்டு தூர உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் சென்று கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்று எந்த ஒரு ஆசிரியராவது தெரிவித்து, அனுமதிக்கப்பட்ட பாடசாலைக்குப் போக மறுக்கின்றாரோ, அவரது நியமனத்தை இரத்துச் செய்து உடனடியாக அவரது இடத்திற்குப் புதிய ஆசிரியர்களை நியமித்து பாடசாலைகளைச் சுமுகமாக இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். நகரப் புறங்களில் வசதியான பாடசாலைகளின் மாணவர்களுக்கு எவ்வாறு கற்பதற்கான உரிமை இருக்கின்றதோ அதே அளவுக்குக் கிராமப்புற மாணவர்களுக்கும் கற்பதற்கான உரிமை உண்டு. இதனை மாகாணக் கல்விப் பணிப்பாளர், செயலாளர் இருவரும் கவனத்தில் எடுத்து உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் எந்த ஒரு அரசியல் தலையீடும் இருக்காதவாறு கல்வி அமைச்சர் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. பாடசாலைகளின் இயல்பான கற்கும் சூழல் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவதாகப் பல பெற்றோர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் குறைப்படுகின்றனர். பொதுவாக க.பொ.த. உயர்தர வகுப்பை எடுத்துக் கொண்டால், தனியார் கல்வி நிலையங்களில் ஒரு வகுப்பில் குறைந்தது 150 தொடக்கம் 300 வரை மாணவர்களை மிகக்

குறைந்த இருக்கையுள்ள வாங்கில் இருக்க வைத்துக் கற்பிக்கப்படுகின்றதுடன் குறித்த நேரக் கட்டுப்பாடு கள் எதுவும் இருப்பதில்லை. இத்தகைய தனியார் கல்வி நிறுவனங்களில் பின்வரும் குறைபாடுகள் அவ தானிக்கபபட்டுள்ளன:

- **குடிநீர் வசதிகள், மலசலகூட வசதிகள்இன்மை**
- **போதிய காற்றோட்டமோ சூரிய ஒளியோ இன்மை**
- **மிகச் சிறிய மரப்பலகையினால் அடிக்கப்பட்ட இருக் கைகளில் மாணவர்களை நீண்ட நேரம் இருக்க வைத்துக் கற்பிக்கப்படுகின்றமை**
- **கட்டணங்களை வசூலிப்பதில் ஆளுக்கு ஆள் அல்லது ரியூற்றரிக்கு ரியூற்றரி வேறுபாடுகள் காணப்படு கின்றமை**
- **பாடசாலைக் கலைத்திட்டத்திற்கும் ரியூற்றரிகளின் கலைத் திட்டத்திற்கும் இடையில் ஒருங்கிசைவு இல்லாமை**
- **சுற்றுப் புறச் சூழல் முறையாகப் பேணப்படாமை**
- **பாடசாலைகளில் கற்பிக்கின்ற அதே ஆசிரியரே ரியூற்றரியிலும் கற்பிப்பதால், பாடசாலைகளில் அவர்களின் செயற்பாடுகள் மிகவும் மந்தமாகவே இருக்கின்றமை**

இவைபோன்ற மேலும் பல காரணங்களினால் பொதுவாக மாணவர்களின் மனோ நிலையும், உடற்சுகமும் பாதிக்கப்படுவதாகப் பலரும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக க.பொ.த உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களில் 10 பேர் பல்கலைக்கழகம் செல்வதற்காக ஏனைய 290 மாணவர்களும், தமது நேரத்தையும், பணத்தை யும் செலவழிக்கின்றனர் என்ற உண்மையை இதுவரை எந்தப் பெற்றோரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதுதான் எங்களுடைய ரியுற்றரிக் கல்வியின் இன்றைய நிலை! இவற்றால் ஏற்படும் பாதிப்பின் தாக்கத்தைக் குறைப்பதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் உடனடி யாகவும், பாரபட்சமின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

i. ரியுற்றரிகள் நடத்துவதற்கான நேரக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். பாடசாலை நாட்களில் காலை நேர வகுப்புகளைத் தடுத்தல், பிற்பகல் 3.00 மணியின் பின்னர் ஆரம்பித்து மாலை 6.00 மணி யுடன் நிறைவடைதல்.

ii. பாடசாலை நேரங்களில் எந்த வகுப்புகளுக்காவது ரியூசன் நடைபெறுவதைத் தடை செய்தல்

iii. வெள்ளிக்கிழமைகளில் சகல வகுப்புக்களுக்குமான மாலை நேர வகுப்புகளையும், ஞாயிற்றுக்கிழமை களில் காலை 6.00 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரையும் வகுப்புகளை நிறுத்துதல். இந்த நடை முறை வடமராட்சியில் மாவட்ட நீதிபதியாக இருந்த நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமையப் பின்பற்றப்பட்டது.

iv. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களின் தொகை 50 க்கு மேற்படாது இருக்கும் வகையில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

v. கட்டணம் அறவிடுவதில் சகல நிறுவனங்களுக்கும் பொதுவானதும், நியாயமானதுமான ஒரு கட்டணத் தைத் தீர்மானித்தல் வேண்டும்.

vi தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள் தமக்கு அருகில் இயங்கும் பாடசாலைகளின் பாடவிதானத் துடன் ஒத்துப்போகும் வகையில் இருவரும் கலந்து பேசித் தமது வகுப்புக்களைக் கொண்டு நடத்த வேண்டும். இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் நன்மை அடைவதுடன் இரண்டிற்கும் இடையேயான முரண்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் தனியார் கல்வி அமைப்புக் காணப்படுகின்றது. ஆனால், பாடசாலைகளில் பாடத்திட்டத்தை முடிக்க முடியாத பகுதிகளில் சிலவற்றைக் கற்பிப்பதற்குத் தனியார் கல்வி நிலையங்கள் பொறுப் பெடுப்பதால் மாணவர்கள் ஒரே விடயத்தை இரண்டு இடங்களில் கற்கின்ற சுமை நீங்கும்.

4. வடமாகாணத்தின் பாடசாலைகள் பலவற்றில் அரசியல் வாதிகளின் தொடர்ச்சியான தலையீடுகளினால் சுதந் திரமான நிர்வாகச் செயற்பாடுகளோ அல்லது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோ இடம்பெறுவதில்லை என அதிபர்கள் சுட்டிக் காட்டியுள்ளதுடன், வாசகர் களின் கருத்துக் கணிப்பும் எடுத்துக் காட்டியுள்ளது. “ஆமை புகுந்த வீடு உருப்படாது” என்ற ஒரு பழமொழி போல் எங்கெல்லாம் அரசியல் வாதிகளின் தலை யீடுகள் அதிகமாகக் காணப்படுகின்றதோ, அங் கெல்லாம் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படு வதுடன், முரண்பாடுகளும் அதிகரிக்கின்றன.

உதாரணமாக அண்மையில் ஊடகங்களில் பரபரப்பாக வெளிவந்த செய்தியில், ஒரு பாடசாலையில் சுமார் 150 வருடங்கள் பழமை வாய்ந்த 15க்கும் மேற்பட்ட பாரிய விருட்சங்களை அரசியல்வாதி ஒருவர் தனக்கிருக்கும் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோ ரின் எதிர்ப்பையும் மீறி தறித்து வீழ்த்தியதால், ஆசிரியர்கள் இடையே அதிருப்தி ஏற்பட்டது. இதன் விளைவாக அந்த அரசியல்வாதியின் துணையுடன் அதிபர் இரு ஆசிரியர்களை இடமாற்றி விட்டார். இன்று அந்தக் கல்லூரி பெற்றோர், பழைய மாணவர்களின் வெறுப்புக்கு ஆளாகி பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்து வரு கின்றது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று ஆசிரியர்களிடம் இருந்தும், பாடசாலைச் சமூகத்திடம் இருந்தும், புலம்பெயர்ந்த பாடசாலை நலன் விரும்பிகளிடம் இருந்தும் கோரிக்கைகள் எழுந்த போதும், அரசியல்வாதியின் அழுத்தம் காரணமாக அவை கல்வி அதிகாரிகளினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று ஆசிரியர் இடமாற்றங்கள், அதிபர் நிய மனங்கள், கல்விப் பணிப்பாளர்களின் நியமனங்கள் போன்றவற்றில் அரசியல் தலையீடுகள் இருப்பதால் தர

மான கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாதிருப்ப தாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ்வாறான நிலைமைகளில் கல்வி அமைச்சின் சட்ட திட்டங்கள், இட மாற்ற நிபந்தனைகள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப் புக்கள், பாடசாலைச் சமூகம் ஆகியவற்றின் விருப்பங் களைப் பரிசீலித்து அவை தொடர்பான நியாயமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கல்விப் புலத்தில் உள்ள அதிகாரிகளுக்கு வழங்குதல் வேண்டும். அதே வேளை மக்களுக்கான சேவையை வழங்குவதற்காக பன்முகப்படுத்திய நிதியில் இருந்தோ அல்லது மாகாண சபை நிதியில் இருந்தோ ஒதுக்கப்படுகின்ற நிதியைத் தனது சொந்த நிதியாகப் பிரசாரப்படுத்திப் பெயரளவில் ஒரு சில இலட்சம் ரூபாக்களைப் பாடசாலைகளுக்குக் கொடுத்து விட்டுத் தங்களைத் தான் விழாக்களுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கவேண்டும் என்று அதிபர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்ற சில அரசியல் வாதிகளின் போக்கினால் பாடசாலைச் சமூகம் கடும் அதிருப்தியில் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பாடசாலைகளின் விழாக்களில் முதன்மை அதிதியாக அழைக்கப்படும் ஒருவர் சமூகத்தில் முன்மாதிரியான வராக இருப்பவராகவும், கல்வியினால் உயர்ந்தவராகவும், நல்லொழுக்கம் நிறைந்தவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவரைப் பின்பற்றும் பிள்ளைகளும் நற்பண்புகள் உள்ளவர்களாகவும், முன்மாதிரியானவர் களாகவும் சமூகத்தில் வாழ்வார்கள் என்பதையும் அதிபர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

5. பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கத்தின் செயற்பாடுகள் 27/1964 ஆம் இலக்க 02.11.1964 ஆம் திகதிய இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய இருக்க வேண்டும். மற்றும் மே.செய.(போ.க.) நானாவிதம் என்ற இலக்க 21.06.1995 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கைக்கு அமை வாக பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக அதிபர்களே இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை நடை முறைப்படுத்தப்பட வேண்டும். பழைய மாணவர் சங்கங்களினால் பாடசாலைகளின் பெயரில் சேகரிக்கப் படும் அனைத்து நிதி மற்றும் அன்பளிப்புகள், செல வீனங்கள் தொடர்பாக அதிபர்களே வகைகூற வேண்டும். சில பாடசாலைகளில் தகுதியானவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்பைப் பெற்றவர்கள் தலைவர்களாக இருக் கின்ற போதிலும் பல பாடசாலைகளில் அரசியல் வாதிகளும், வியாபாரிகளும் சமூகத்தின் பொது நிதி களைக் கொள்ளை அடித்து வாழ்பவர்களும் தலைவர் களாக இருந்து பாடசாலையின் வகைகூறலுக்குப் பொறுப்பாக இருக்கும் அதிபர் ஆசிரியர்களைக் கட்டுப் படுத்தும் நிலைமை காணப்படுவதை கல்வி அமைச்சர் அனுமதிக்கக் கூடாது. இந்த நிலையில் நான் உடுப் பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றிய போது பழைய மாணவர் சங்கம் தொடர்பாகக் கல்வி அமைச்சில் இருந்து கிடைத்த மே.செய.(போ.க.) நானாவிதம் இலக்கமிட்ட 21.06.1995 ஆம் திகதி யிட்ட சுற்றறிக்கையின்படி பழைய மாணவர் சங்கங் களின் தலைவர்களாக அதிபர்களே பதவி வழியாகத் தலைவர்களாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதனை, அப்போதைய கல்விப் பணிப்பாளருக்கு, நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததை அவரும் ஏற்றுக் கொண்டார். அப்போது எமது பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக மிகச் சிறந்த கல்வியாளரும், யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரு மாகப் பெயர்பெற்றிருந்த பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்கள் இருந்தமையைச் சுட்டிக் காட்டி இவர்களைப் போன்றவர்கள் தலைவர்களாக இருப்பது எமது கல்லூரிக்குப் பெருமை என்பதால், அவர் தொடர்ந்தும் தலைவராக இருப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்ற எனது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவர் அமரத்துவம் அடையும் வரை அவரே தலைவராக இருந்தார். ஆனால் சமூகத்தில் செல்வாக்கு அற்றவர்களையும் அரசியல்வாதிகளையும், கடை வியாபாரிகளையும் தலைவர்களாகக் கொண்டி ருக்கின்ற ஒரு பாடசாலையில் நல்ல விழுமியங்களை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

எனவே இவை போன்ற சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்கும், கல்லூரியின் பெயரில் இடம் பெறும் நிதித் துஸ்பிரயோகங் கள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் சுற்றறிக்கைக்கு அமைவாக "பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக அதிபர்களே கடமையாற்ற வேண்டும்" என்ற சரத்தை முழுமையாக கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு சுற்றறிக்கைக்கு முரணாகச் செயற்படும் பழைய மாணவர் சங்கங்களுக்கான அங்கீகாரத்தை கல்வி அமைச்சோ அல்லது மாகாணக் கல்வித் திணைக்களமோ அல்லது வலயக் கல்வித் திணைக்களங்களோ அல்லது கல்வி அமைச்சரோ வழங்குவதைத் தவிர்த்தல் வேண்டும்.

6. பாடசாலைகளுக்கு மேற்பார்வை, வழிகாட்டல்கள், பின் னூட்டல்கள் என்பன முறையாக வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடுகள் அதிபர்களினாலும், பெற்றோரினாலும் முன்வைக்கப்படுகின்றன. கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களங் களில் இதற்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுக் கப்பட வேண்டும். இதுவரை காலமும் இடம்பெற்று வந்த பெயரளவிலான மேற்பார்வையை கல்வி அதிகாரி களால் கைவிடப்பட்டு உண்மையாவே பாடசாலை களின் கள நிலைமையைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் தொடர்ச்சியான பின்னூட்டல்களும், பரி காரக் கல்விச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப் படவேண்டும். ஆனால் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய இத்தகைய மேற்பார்வை நுட்பங்களில் உள்ள வினைத்திறனற்ற செயற்பாடுகளே இன்று எமது மாகாணத்தின் கல்வித் தரவீழ்ச்சிக்கான காரணமாகும்...!

**(தரமான கல்வி அபிவிருத்தியை நோக்கிய பயணம் மேலும் தொடரும்)**

# முல்லையில் காடழிப்பு, சட்டவிரோத குடியேற்றம்
# சிங்கள அரசின் சதி




விரல் விட்டு எண்ணக் கூடிய சில இளைஞர்களின் குறுகிய கால தொடர்ச்சியான உழைப்பே மக்கள் பங்கேற்புடனான "முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலில் இருந்து கூழா முறிப்பு நோக்கிய" பாரிய கவனயீர்ப்பு போராட்டத்துக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பிரதேசத்தில் இனப்பரம்பலைச் சிதைக்கும் நோக்குடனான சட்டவிரோத குடியேற்றத்தை மேற்கொள்ளும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணியளவில் முள்ளியவளை ஆலடி சந்தியிலிருந்து கவனயீர்ப்பு பேரணி ஒன்று "சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான இளைஞர் அணியின்" ஏற்பாட்டில் பெரும் எழுச்சியுடன் இடம்பெற்றது.

கூழாமுறிப்பில் இருந்து வாரிவண்ணான் காடு வரைக்குமான பிரதேசமானது முள்ளியவளைக்கும் - ஒட்டுசுட்டான் வீதிக்கும், நெடுங்கேணி - புளியங்குளம் வீதிக்கும் இடைப்பட்ட 177 ஏக்கர் காட்டை அழித்து முஸ்லிம் மக்களைக் கொண்ட குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இனப்பரம்பலை சிதைக்கும் நோக்குடனான சட்டவிரோத குடியேற்றத்தை மேற்கொள்ளும் இத்திட்டத்தை எதிர்த்தே மேற்படி போராட்டம் இடம்பெற்றுள்ளது.

"வனம் அழித்தால் இனம் அழியும்", "வனத்தை அழிப்பதும் எங்கள்வாழ்வுரிமையை அழிப்பதும் ஒன்றே", "நிலத்தொடர்ச்சியை சிதைத்து எம் இனத் தொடர்ச்சியை அறுக்காதே", "இது இனவாதம் அல்ல வன வதைக்கு எதிரான வாதம்", "எம் அடையாளம் இழந்து அகதியாக வாழமாட்டோம்", "எங்கள் வனத் தாய் மடியில் தீ வைக்காதே", "இயற்கை சமநிலையை குழப்பி எம் வாழ்வை சிதைக்காதே", "எங்கள் நிலம் எங்கள் வனம் காப்பது எமது கடமை" போன்ற பல்வேறு பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தாங்கியிருந்தனர்.

முல்லைத்தீவில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் உள்ள காடுகளை அழித்து முஸ்லீம் மக்களை குடியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பில் சமூக செயற்பாட்டாளர் ஞானதாஸ் காசிநாதர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நிலைமையானது வடக்கிலும் தமிழ் - முஸ்லீம் மக்களிடையே நிரந்தர பகைமைக்கும், மோதல் போக்குக்கும் செல்ல வழிவகுத்து விடும். முஸ்லீம் அரசியல்வாதி ரிசாத் இந்த குடியேற்ற நாடகத்தை மேற்கொள்வது அவருடைய தேர்தல் அரசியல் எனும் "அற்ப நோக்கத்தை" அடிப்படையாக கொண்டதாயினும்... சிங்கள பேரினவாத அரசு "தன் அடுத்த கட்ட நகர்வுக்கான நீண்ட கால திட்டத்திலேயே" அவருக்கு இந்த அனுமதியை வழங்கி உள்ளது.

அடுத்த கட்ட நகர்வு யாதெனில், "கிழக்கில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றும் முயற்சியை சுமூகமாக நடைமுறைப்படுத்துவது ஆகும்"

ஏன் "சுமூகமாக" எனச் சொல்கிறேன் என்பது உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறேன்.

இந்த குடிப்பரம்பல் மிஷனை நிறைவேற்றிய பின்னரே நீங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் "புதிய அரசியல் யாப்பு" உருவாக்கப்படும் அந்த "புதிய அரசியல் யாப்பில்" வைக்கப்படப்போகும் பெரிய ஆப்பு - தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும்!

சிங்கள பேரினவாதத்தினதும், இந்திய மேலாதிக்கத்தினதும், மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களினதும் நலன்களை பேணும் வகையில் தமிழரும் முஸ்லிம்களும் ஒருவரோடுருவர் முட்டி மோதி சிங்களத்தோடு அண்டிப் பிழைத்து எம் பிள்ளை குட்டிகளை பெருக்குவோமாக.

இதுக்குதான் ஆசைப்படுகிறோமா? என்றார்.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.07.2017 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.